



# தினப்புயல்

news THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -296



## சீனாவுடன் கைகோர்ப்பது இலங்கைக்கு ஆபத்து



## ஊடகத்துறையில் ஒரு வரலாற்று நாயகன் மாமனிதர் சிவராம்



## அதிகார தொனியில் உழைப்பாளிகளை அடக்க முனைவது ஏற்றுக்கொள்ள முடியாதது – ரிசாட்

# சீனாவுடன் கைகோர்ப்பது இலங்கைக்கு ஆபத்து



இன்றைய அரசியல் சூழ்நிலையில் அல்லது உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவியுள்ள இந்த காலகட்டத்தில் இலங்கையில் மிக முக்கியமாக தேர்தல் ஒன்று இடம்பெற இருக்கிறது. மக்கள் பெருவாரியாக பாதிக்கப்பட்ட நிலையில் உலக வல்லரசுகள் ஒவ்வொன்றும் தமக்கிடையே போட்டா போட்டியாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றதை அவதானிக்கமுடியும். இவ்வாறானதொரு நிலையில் யுத்தம் இலங்கையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற காலகட்டத்திலிருந்து இற்றை வரைக்கும் இலங்கைக்கான சீனாவின் பங்களிப்பு பாரியளவில் நடைபெற்றுக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சீன எரி அமிலத்தை இலங்கை அரசுக்கு முதலில் கொடுத்தது சீனா தான். இந்த சீன எரி அமிலங்கள் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் முள்ளிவாய்க்காலில் இலங்கை அரசு பயன்படுத்தியது. இதனடிப்படையில் சீனாவின் இலங்கையுடனான நட்புறவு என்பது தற்பொழுது ஒரு ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளது. சீன நாடு இலங்கைக்கு உதவி செய்யும் பொழுது அல்லது அதனுடைய முதலீடு இலங்கையில் இருக்கும் பொழுது ஏனைய நாடுகள் இலங்கையையும் ஓரங்கட்டும் நிலைப்பாடு உருவாகும். அல்லது ஏனைய நாடு தமக்கிடையே உள்வாங்கும் நிலைப்பாடும் உருவாகலாம். எது எவ்வாறாக இருப்பினும் கடும் விளைவுகளை சந்திக்க வேண்டி வரும் என்று சீனா பகீரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனை இந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது அமெரிக்கா, அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகள் சீனாவின் பொருளாதாரத்தை முடக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளன. இதற்காக பல ஆதரவு நாடுகளும் செயற்பட்டு வருகின்றன. இதன் பொழுது தக்க பதிலடியை கொடுப்போம் என்று சீனா பகீரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சீனாவில் பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் உலகை உலுப்பிக் கொண்டிருக்கிறது. தற்பொழுது உலகம் முழுவதும் 34 இலட்சத்து 1231 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 2 இலட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேல் பலியாகியுள்ளனர். இந்த நிலையில் உலகில் சீனாவால் 184 நாடுகளுக்கு கொரோனா வைரஸ் முழுமையாக பரவியுள்ளது. இதனால் வெளிப்படையாகவே சீனாவை ஏற்க வேண்டிய நிலை அனைத்து நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில் அமெரிக்காவின் செனட் சபையினரும் சீனாவுடனான வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ளும் ஒரு சூழல் உருவாகியுள்ளது. இதனிடையில் நாடுகளிடையே சீனாவுடன் வர்த்தக உறவுகள் துண்டிக்கப்படுகின்ற பொழுது அந்த நாடு தனது உற்பத்தியை பெருக்க முடியாத சூழல் உருவாகும். தற்பொழுது பார்க்கும் பொழுது குணமடைந்தவர்களுக்கும், மீண்டும் இந்த கொரோனா தொற்று உருவாகிவருகின்றது, இதற்கான மருந்து மாத்திரைகளும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. நிலைமை இவ்வாறு இருக்கும் பொழுது மீண்டும் கொரோனா வைரஸினுடைய தாக்கம் ஏற்படுவதனால் அதற்கான மருந்து மாத்திரைகளை கண்டுபிடிக்க வேண்டிய தேவை அனைத்து நாடுகளுக்கும் உருவாகியிருக்கிறது. இதனால் சர்வதேச ரீதியாக வர்த்தகம் பொருளாதாரம் முடக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. ஆகவே இலங்கையின் உற்பத்தி மற்றும் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டுமாக இருந்தால் இலங்கை நாடானது விவசாய உற்பத்தியை பெருக்க வேண்டும், அந்நிய நாட்டு செலாவாணியை பெருக்க வேண்டும். அவ்வாறு செய்வதனூடாகவே எதிர்வரும் காலங்களில் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதனூடாக கொரோனா வைரஸ் தாக்கங்களில் இருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ளக் கூடிய சூழல் உருவாகும்.

சீனாவை பொறுத்தவரையில் அந்த நாட்டில் பசி பட்டினியால் 18 ஆம் நூற்றாண்டில் பல இலட்சக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். அந்த நாட்டில் வறுமை தலை தூக்கவே பாம்பு, வௌவால், பல்லி போன்றவற்றை உட்கொண்டனர் என்பதே வரலாறு. அதன் பின் பொருளாதார ரீதியில் வளர்ச்சியையும் சர்வதிகார நாடாகவும் தற்பொழுது வளர்ச்சி கண்டுள்ளது. உலக பொருளாதார சந்தையில் சீனா இன்று பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. அமெரிக்காவை எதிர்த்த எந்தவொரு நாடாக இருந்தாலும் அமெரிக்கா ஏதோவொரு குற்றச்சாட்டை முன்வைத்து அந்தநாட்டைமழுங்கடிப்பது, இல்லாமல் செய்வது போன்ற நடடிவக்கைகளை மேற்கொண்டது தான் வரலாறு. இவ்வாறான நிலையில் இலங்கையின் பொருளாதாரம் என்பதும் ஒரு வலுவான கட்டத்தை எட்டுகின்ற பொழுது அதனை மழுங்கடிக்க செய்கின்ற நடவடிக்கையினை அமெரிக்கா மேற்கொள்ளும் அனைத்து நாடுகளும் மேற்கொள்ளும். இதன் பொழுது இலங்கை அரசு சீனாவிடமே கையேந்தும் சூழல் உருவாகும். ஒரு உலகப்போர் ஆரம்பிக்குமாக இருந்தால் சர்வதேச ரீதியாக இலங்கையின் திருகோணமலை துறைமுகம் மிக முக்கியத்துவம் பெறும். 1000 கணக்கான கப்பல்களை ஒரே நேரத்தில் மறைத்து வைக்கக்கூடிய இயற்கை தளமாக திருகோணமலை துறைமுகம் விளங்குகின்றது. ஆகவே சீனா இதனை பயன்படுத்துவதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொள்ளும். இன்று இலங்கை மீது அமெரிக்கா, சீனா அல்லது ஏனைய நாடுகளும் அக்கறையுடன் செயற்படுவதற்கும் காரணம் இது தான். விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் வடக்கிலும், கிழக்கிலும் ஏனைய கடற் பிராந்தியத்திலும் எந்தவொரு நாடும் உள்நுழைவதற்கு தடையாகவே இருந்து வந்தது. அவ்வளவு தூரம் அவர்களுடைய கடல், வான், தரை என போராட்ட ரீதியில் சிறந்து விளங்கினார்கள். அவ்வாறானதொரு கட்டமைப்பு தற்பொழுது இலங்கையில் இல்லை.

இதனது மீள் உருவாக்கம் என்பது தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டங்களை கட்டியெழுப்பும் ஒரு சூழ்நிலையாக அமெரிக்கா தற்பொழுது உள்ளது. சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் பலம் பொருந்தியவர்களாகவே இதுவரை விளங்கி வருகின்றார்கள். அவர்களின் அரசியல் கட்டமைப்பு தொடர்ந்தும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. தொடர்ந்தும் அமெரிக்கா அதனை பயன்படுத்தும். அவ்வாறானதொரு சூழ்நிலை உருவாக்கப்படும் போது விடுதலைப்புலிகள் மீண்டும் பலம் பெறுவார்கள். நாம் உள்ளூர் யுத்தத்தை ஒரு புது பேச்சுவார்த்தையினூடாக தீர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஆனால் சர்வதேச ரீதியாக எமது நாடு பாரிய விளைவை பாரிய அழிவை நோக்கி சென்றுகொண்டிருக்கிறார்கள்.

இதனை தடுத்து நிறுத்தும் நோக்கிலேயே இலங்கை அரசு தமது அரசியல் காய் நகர்த்தல்களை நகர்த்த வேண்டும். தமது அர்ப்பசொற்ப சலுகைக்காக இலங்கை வாழ் மக்களை அடைமானம் வைத்து அல்லது இனவாதம், மதவாதம், தேசியவாதம் போன்றவற்றை விதைத்து செயற்படுமாக இருந்தால் அதன் விளைவு சர்வதேச ரீதியாக நாடுகள் தாக்கப்படும் பொழுது இலங்கையும் அதற்கு விதிவிளக்கல்ல. இந்த வகையில் பார்க்கும்பொழுது நாடளாவிய கொரோனா வைரஸின் தொற்று இன்று உலகளாவிய ரீதியில் எட்டிப் பிடித்திருக்கிறது. அதனது விஸ்பரூபம் பெருவாளியாக உருவெடுத்துள்ள நிலையில் அதனை கட்டுப்படுத்த முடியாது சர்வதேச நாடுகள் திண்டாடிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் குறைந்தது இதனை பூரணமாக கட்டுப்படுத்த ஒரு வருடமாகலாம். அதனிடையில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் மாழப்போகின்றன. கொரோனா தொற்றினால் 10 ஆயிரம் பேர் வரையிலான இறப்பு காணப்பட்டாலும் 2 இலட்சத்திற்கும் மேல் இறப்புக்கள் ஏற்பட்டுள்ளது. ஒரு மாதத்திற்கு முன்னர் இவ்வாறு நடக்குமென யாரும் எதிர் பார்க்கவில்லை.

ஆனால் நாளுக்கு நாள் இலங்கையிலும் கொரோனாதொற்றின்தாக்கம்தற்பொழுது தான் வீரியம் அடைந்துவருகின்றது. இயற்கையான மருத்துவம், சுகாதார தொண்டர்களின் அர்ப்பணிப்பு, காவல் துறையினரின் சட்ட ஒழுங்குகள், ஊடகவியலாளர்கள், தாதியர்கள், மருத்துவர்கள் என்று பொதுப்பணியில் களழிறங்கி செயற்படுவதனால் இலங்கையில் இந்தளவேனும் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த முடிந்துள்ளது. இந்த நிலை இன்னும் ஒரு மாதமளவில் தொடருமாக இருந்தால் மட்டுமே இலங்கையில் கொரோனா தொற்றை ஒரு 6 மாதத்தில் கட்டுப்படுத்த முடியும். இதற்கிடையில் சீனாவின் நட்புறவு என்பது இலங்கையை குட்டிச்சுவடாக்குகின்ற ஒரு நடவடிக்கையாகவே மாறப்போகின்றது எனலாம்.

–இரணியன்–

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கோட்டபாயவின் தேர்தலை மையப்படுத்தும் அரசியல் இந்த நாட்டுக்கு குழி வெட்டும் செயல்

இன்றைய சூழ்நிலையில் கொரோனா தொற்றை முற்றாக கட்டுப்படுத்த வேண்டிய தேவை பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. இதே நேரத்தில் அவசரஅவசரமாக தேர்தலை வைக்க வேண்டிய தேவையில் காப்பந்த அரசாங்கம் இருக்கிறது. ஆனால் கொரோனா தொற்றினுடைய எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. அரசாங்கத்தை பொறுத்தவரையில் ஆரம்பத்திலேயே ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தி கொரோனா வைரஸ் தொற்றினை கட்டப்பாட்டினுள் கொண்டு வந்ததன் பின்னர் மக்களை நடமாட விட்டிருந்தால் இவ்வாறானதொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. 200 க்கும் மேற்பட்ட கடற்படையினருக்கு இவ் தொற்று ஏற்பட்டிருக்கவும் வாய்ப்புக்கள் இல்லை. நாட்டிலுள்ள மக்களை பாதுகாத்தால் மட்டுமே தேர்தல் ஒன்று சாத்தியப்படும். அதனை விடுத்து ஊடங்கு சட்டத்தை அமுல்படுத்தி அன்றாட வியாபாரங்களை முடக்குவதனூடாக கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கத்தினை கட்டுப்படுத்த முடியும் என்னும் அரசாங்கத்தின் எண்ணக்கரு தவறானது. மிகவும் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் தேர்தல் வேட்புமனு தாக்குதல் செய்யப்பட்டிருக்கின்றது. உலக நாடுகள் முழுவதும் கொரோனா வைரஸை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்றும் பொருளாதாரத்தை எப்படி மீண்டும் வளப்படுத்தலாம் என்றும் தமது திட்டங்களை வகுத்துக்கொண்டிருக்கக்கூடிய காலகட்டத்தில் தேர்தல் பற்றிய சிந்தனைகளோடு இலங்கை அரசு செயற்படுகிறது என்பது கோட்டபாய ராஜபக்ச அவர்கள் தன்னுடைய அரசியலுக்கு மட்டுமல்ல இலங்கையில் வாழுகின்ற மக்களுக்கும் குழி வெட்டுகின்ற ஒரு செயற்பாடாகவே இதனை பார்க்க முடிகிறது.

எந்தவொரு விடயத்தை எடுத்துக்கொண்டாலும் இடம், பொருள், ஏவல் என்பது அவசியம். அதனை கருத்தில் கொண்டே எந்தவொரு விடயங்களாக இருந்தாலும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அல்லது பாராளுமன்றத்தை கூட்டி மக்களுக்கான நிவாரணப்பொருட்கள் மூடப்பட்ட நிறுவனங்களின் மீள் நடைமுறை செயற்படுத்தப்படுமாயின் பொருளாதார கட்டமைப்பை வளர்த்துக்கொள்ள முடியும். கொரோனா தொற்றினுடைய அதிகரிப்பு ஒருபுறத்திலிருக்க, வறுமையினால் குடும்பங்களில் பிரச்சனைகள் தற்கொலைகள் சர்வசாதாரணமாகவே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. வறுமையினால் மட்டுமே நூற்றுக்கணக்கானோர் இறந்திருக்கின்றார்கள், குடும்ப பிரச்சனையினால் நூற்றுக்கணக்கானோர் இறந்திருக்கிறார்கள், வாகன விபத்தினால் நூற்றுக்கணக்கானோர் இறந்திருக்கிறார்கள். ஆகவே இறப்பு என்பது ஒரு மனிதனை எப்பொழுதும் சந்திக்கலாம். ஒரு அசாதாரண சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொழுது தான் இவ்வாறான மரணங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்படுகிறது. இன்றைய சூழ்நிலையில் இலங்கையில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 700 ஐயும் தாண்டியுள்ளது. 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதில் இனவாதம் மீண்டும் தூண்டப்படுமாக இருந்தால் கொரோனா வைரஸை கட்டுப்படுத்த முடியாமல் போகும். இந்த நிலையில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் பொழுது 45 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். 11699 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதே நிலையில் மாவட்டங்களை விட்டு மாவட்டங்களுக்கு வந்தவர்கள் 1000 கணக்காக்கானோர் இடைத்தங்கள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சொந்த குடும்பங்களை விட்டு தனியே இருக்கின்றனர். இவர்கள் தங்களின் சொந்த குடும்பங்களுடன் வாழும் வழியை அரசாங்கம் பெற்றுக்கொடுக்க வேண்டும். தொழில் துறையற்றவர்களுக்கு ஒழுங்கான நிவாரணம் அரசாங்கத்தால் வழுங்கப்பட வேண்டும். தேர்தல் நிலைப்பாடு என்பதனை அரசாங்கம் கைவிட்டு கொரோனா வைரஸினை கட்டுப்படுத்தும் துரித நடவடிக்கையினை மேற்கொள்வதனால் மக்கள் மனதிலும் இடம் பிடிக்க முடியும். இந்த யதார்த்தத்தை விளங்கி கொண்டு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் செயற்பட வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கை.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**103**

இறுதியில், கிட்டத்தட்ட 3 மணித்தியாலயம் வரை தொடர்ந்த, 16 கிலோமீற்றர் தூரத்தைக் கடந்த சமரின் பின்னர், எமது படைப்பிரிவுகள் எல் உவேராவை அடைந்தனர். அப்போது வீரர்களிடமிருந்து வித்தியாசமான சகிக்க முடியாத துர்நாற்றம் வெளியோறியது. அவர்கள் படைப்பிரிவிடம் வந்தபோது அந்த நாற்றம் அவர்களை எதிர்கொண்ட ஒவ்வொருவரையும் தூக்கியெறிந்தது. ஆனால், எங்களாலோ அந்தமணத்தை உணரமுடியவில்லை.



கெரில்லாக்கள் வேகமாகத் தமது கூடாரங்களை கழற்ற வேண்டும். இதன் போது, அவர்களை இணங்காட்டக் கூடிய எந்தவொரு தடையத்தையும் விட்டுவிடக் கூடாது. தற்காப்பு நடைமுறை அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டும். உறங்கிக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு 10 கெரில்லாக்களுக்கும் ஒன்று அல்லது இரண்டு காவற் கடைமையாளர்களை நியமிக்க வேண்டும். அவர்களை ஒழுங்கமைப்பில் தொடர்ச்சியாக மாற்ற வேண்டும். கூடாரத்திற்கான ஒவ்வொரு பாதையும் நம்பகரமாகப் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும்.

போர் வாழ்க்கையைக் கடைப்பிடிக்கின்ற கெரில்லா, உணவு தயாரிக்கின்ற பழக்கங்கள் சிலவற்றைப் பெற்றுக்கொள்கின்றான். அவற்றில் ஒன்று, வேகமாக உணவு தயாரிக்கின்ற முறை. மற்றையது மலைப்பாறைகளில் வளர்கின்ற சிலதாவரங்களை வாசணைப் பொருட்களாக ஏனைய உணவுக்குப் பயன்படுத்துதல். சிலர் புதியவகை உணவைத் தயாரிக்கும் முறைகளைச் சொல்லித் தருவார்கள். இதனால் கெரில்லா வெவ்வேறு வகையான உணவுகளைப் பெற்றுக் கொள்கின்றான். அவை பிரதானமாக மாவுத் தோசை, கிழங்கு, தானியம், உப்பு, சிறிதளவு தாவர அல்லது மிருக நெய், சந்தர்ப்பத்தை பொறுத்து சிறிய இறைச்சித்துண்டு போன்றனவற்றைக் கொண்டதாக இருக்கும்.

இந்தப் பல்வடிவப் போர் வாழ்க்கையில் மிக முக்கியமான சம்பவம் சமராகும். கெரில்லாக்கள் மத்தியில் சமர் பெரிய சந்தேசத்தை ஏற்படுத்துவதுடன் அவர்களது பலத்தையும் இரட்டிப்பாக்குகின்றது. சமர் – கெரில்லாக்களின் வாழ்க்கையில் உச்சஸ்தானமாகும். தகுந்த தருணத்தில் அதாவது, எடுத்துக்காட்டாக, கணிசமான அளவு பலமற்ற, தாக்கியழிக்கப்படக்கூடிய எதிரியின் முகாம் ஒன்று கண்டு கொள்ளப்பட்டு, நன்றாக ஆராயப்பட்ட பின்னர் சமர் தொடங்கப்படுகின்றது. விடுதலைப் படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் எதிரியின் வாகனத் தொடரணி நகர்கின்ற தருணத்தில் சமர் தொடங்கப்படுகின்றது.

எதிரி முகாமின் மீது தாக்குகின்ற போது, கெரில்லாக்களின் செயற்பாடுகள் முற்றுகை வட்டத்தை ஊடறுக்க முனைகின்ற எதிரியை அழிக்கும் நோக்கிலானதாக இருக்கும். ஏனெனில், சுற்றக்கழி தோண்டியிருக்கின்ற எதிரியை எதிர்த்துச் சமரிடுவது கெரில்லாப் படைகளுக்கு நல்லதல்ல. ஆனால் மறுவளமாக, அறிமுகமற்ற பிரதேசத்தினூடாக எதிரிப்படைப்பிரிவு நகரும் போது, சிப்பாய்கள் அதியுச்ச பதற்றத்தில் இருப்பதுடன், ஒவ்வொரு சலசலப்புக்கும் பயப்படுவார்கள். இந் நிலையில் அவர்களுக்கு இயற்கைக் காப்புக்கள் இருக்காது – இதுவே தாக்குவதற்கான சிறந்த இலக்கமாகும்.

சுற்றகழி தோண்டி, நன்றாக ஆயுதந்தரித்து, தாக்குதலை தவிடுபொடியாக்குகின்ற திறன் கொண்டவனாக எதிரி இருந்தாலும் அவன் கடின நிலைமைக்குத் தள்ளப்படலாம். வாகனத் தொடரணியின் நகர்வின் போது இரண்டு மூன்று பக்கங்களால் திகைப்புத் தாக்குதல் தொடுத்துச் சிதறடிக்கப்படுவதில் கிடைப்பதைவிட, இக்கடின நிலைமை சிறந்ததாகும். தனது முகாமில் சுற்றகழி தோண்டியிருக்கின்ற எதிரியை படிப்படியாக கைப்பற்றுவதோ அவன் மீது தீர்க்கமான தாக்குதலைத் தொடுப்தோ சாத்தியமில்லையானால், முற்றுகையின் விளைவால் எதிரிப்படைகள் இழப்பைச் சந்தித்தபின், அவர்களது போர்க் கட்டமைப்பு சீரழிக்கப்பட்டபின் கெரில்லாப் படைப்பிரிவு அவசியம் பின்வாங்க வேண்டும்.

நகர்ந்து கொண்டிருக்கின்ற எதிரியின் பலத்திற்கு எதிராகக் கணிசமானளவு கெரில்லாக்கள் சளைத்தவர்கள் இல்லையென்றால், வாகனத் தொடரணியின் முன்னணிப்படை மீது தாக்கதல் தொடுக்கப்படுகின்றது. எப்படிப்பட்ட இலக்கு என்றால் இதனை அவசியம் மேற்கொள்ளவேண்டும். ஏனெனில், வாகனத் தொடரணியின் முன்பகுதி மீது சில தாக்குதல்கள் தொடுக்கப்பட்டபின், சிற்பாய்கள் மத்தியில் அங்கே கூடுதல் இழப்பேற்பட்டதென்ற வதந்தி பரவும். இதனால் அவர்கள் இறந்த வீரர்களின் இடத்தை நிரப்புவதற்குச் சம்மதிக்க மாட்டார்கள். விளைவில், இவையாவும் கலகத்தில் சென்று முடிகின்றன. முன்னணிப் படைக்குத் தாக்கும் போது, வாகனத் தொடரணியின் ஏனைய பகுதிகள் மீதும் தாக்குதல் தொடுக்கப்படுகின்றது என்பதை மறக்கக்கூடாது.

கெரில்லாவிடம் முன்வைக்கப்பட்ட பணியை நிறைவேற்றலும் பிரதேசத்தைப் பயன்படுத்தலும் கூடியளவில் அவனது உபகரணங்களிலேயே (தளபாடங்களிலேயே) தங்கியிருக்கின்றது. சிலகாலத்திற்கு அவன் தனியனாக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதால், அவனது பொருட்பையில் சகல இன்றியமையாத பொருட்கள் யாவும் இருக்க வேண்டும். சுருங்கச் சொன்னால், கெரில்லாவின் உறைவிடத்திற்குப் பதிலான சகல பொருட்களுமாகும். கெரில்லாவின் உபகரணத்தை ஆராயும் போது, கரடுமுரடான பிரதேசத்தில், அடிக்கடி மழைபெய்கின்ற காலங்களில், ஒப்பீட்டளவில் குளிர்காலங்களில், எதிரியால் பின்தொடரப்படும் சமயங்கள் போன்ற நிலைமைகளில் செயற்படுவதற்கான உபகரணத்தைப் பிரதானமாகக் கெரில்லா தன்னுடன் கொண்டிருக்க வேண்டும் என்பதே அவசியம் சொல்லப்பட வேண்டிய விடயமாகும். கேரில்லாவின் உபகரணம் பிரதானமானவை, இரண்டைந்தரமானவை என வகுக்கப்படுகின்றது. பிரதானமான உபகரணத்தில், மேற்குறித்த சூழ்நிலையில் ஓய்வெடுக்க உதவுகின்ற காமாக் உள்ளடக்கப்படுகின்றது. எப்பொழுதும் இரண்டு மரம் கிடைக்கும். அவற்றிற்கிடையில் இதனைத் தொங்கவிடலாம். துரையில் படுக்கக்கூடியதாக இருந்தால், காமாக்கை மெத்தையாகப் பயன்படுத்தலாம். முழை பெய்கின்ற போதும் தரை நனைந்திருக்கின்ற போதும் (மலைப்பிரதேசங்களில் இது அடிக்கடி ஏற்படும்) காமாக்கிற்குப் பதிலாக வேறெதுவுமில்லை.

**தொடர்வான்...**

**நெற்றிப்பொறியன்**

# அதிகாரத் தொணியில் உழைப்பாளிகளை அடக்க முனைவதை ஏற்றுக் கொள்ள முடியாது - ரிஷாட்

அதிகாரத் தொணியில் உழைப்பாளிகளை அடக்க முனைவதை ஏற்றுக் கொள்ள முடியாது. - முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மே தின செய்தியில் தெரிவிப்பு.

தொழிலாளர் வர்க்கத்தினரின் உழைப்பு, அர்ப்பணிப்பு, வாழ்க்கைப்போராட்டங்களுக்கு விடிவு, விடுதலை கிடைக்க வேண்டுமெனக் கூறியுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், அதிகாரத் தொணியில் உழைப்பாளிகளை அடக்க முனைவதை ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது பற்றி மேலும் தெரிவித்துள்ளதாவது,

தினமும் உழைத்தாலும் வாழ்க்கையில் உயர முடியாத நிலையிலே தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களின் உரிமைக்கான குரல்கள் ஓங்கி ஒலித்துப் புரட்சி ஏற்பட்டதாலே உலகெங்கும் மே தினம் கொண்டாடப்படுகிறது. ஊர்வலங்கள், கூட்டங்களால் விழிப்பூட்டப்படும் இவர்களின் இன்றைய தினம் (01/05/2020) கொரோனா வைரஸால் முடக்கப்பட்டுக்கிடக்கிறது. இந்நிலை தொழிலாளர்களை மாத்திரமல்ல, முதலாளிமார் உள்ளிட்ட சகலரையும் வீட்டுக்குள் விலங்கிட்டுள்ளது. இருந்தபோதிலும் தேசத்தின் வருமானத்துக்கு முதுகெலும்பாகவுள்ள தொழிலாளர் படையை நாம் மறக்க முடியாது. கூலி வேலை செய்வோரை மாத்திரம் சில பொருளாதாரக் காரணிகளுக்காக ஒதுக்கிவிட்டு சுரண்டல்களில் ஈடுபடும் அவல நிலைமைகளை இல்லாதொழிப்பதே இத்தினத்தின் சிறப்பம்சமாகும்.

அரசியல் விளம்பரங்களுக்காக அரங்கேற்றப்படும் மே தினங்களைத் தவிர்த்து அர்த்தமுடன் கூடிய செயற்பாடுகளை முன்னெடுப்பதே தொழிலாளர் சமூகத்திற்கு நாம் செய்யும் கைமாறாக இருக்கும். முதலாளித்துவ அரசுகளுக்கு எதிராக அன்று கிளர்ந்தெழுந்த தொழிலாளர் வர்க்கம் இன்று சர்வாதிகார அரசியலுக்கு எதிராகவும் போராட வேண்டி ஏற்பட்டுள்ளது. இன வேறுபாடுகளின்றிய நிவாரணங்கள், சேவைகளே உழைப்பாளிகளை உற்சாகப்படுத்தும். கொவிட்-19 கொடூரங்களிலிருந்து முற்றாக விடுபடுவதற்கு முன்னர் தேர்தலுக்கு அவசரப்படுவதும் அரசியல் நோக்கிலான கைதுகளும் மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ள நிலையிலும் தொழிலாளருக்காக குரல் கொடுப்பதை எங்களால் நிறுத்த முடியாது. ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்குமாக உழைக்கும் எமது கட்சி நாளாந்த உழைப்பாளர்களின் பொருளாதாரத்தை வளப்படுத்தவும் குரல் கொடுக்கும். எனவே இத்தினத்தை ஊர்வலங்கள், மேளதாளங்களால் கொண்டாடாது உணர்வு ரீதியாகக் கொண்டாடுவதே சிறப்பானது.

மேலும் மே தினம் பற்றிய ஓர் சிறப்பு பார்வை

அதிகாலை முதல் அந்திசாயும் வரை' என்பதுதான் அப்போதெல்லாம் வேலைநாள். இதனால் ஏற்பட்ட மனக்குமுறல்களை அமெரிக்கத் தொழிலாளர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே வெளிக்காட்டினர்.

பதினாறு, பதினேழு ஏன் பதினெட்டு மணி நேர வேலை என்பதெல்லாம் அப்போது சாதாரண விஷயங்கள், 1806-ம் ஆண்டு பிலடெல்பியா நகரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்களின் தலைவர்கள் மீது சதி வழக்கு போடப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின் போது தொழிலாளர்கள் பத்தொன்பது, இருபது மணி நேரங்கள் வேலை வாங்கப்பட்டார்கள் என்ற விடயம் வெளியே வந்தது.

1820 மற்றும் 30-களில் வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று பற்பல வேலைநிறுத்தங்கள் நிகழ்ந்தன. பத்து மணி நேர வேலைநாள் என்ற கோரிக்கை பல தொழில் மையங்களில் முன் வைக்கப்பட்டது. பிலடெல்பியா நகர இயந்திரத் தொழிலாளர்களின் சங்கம்தான் உலகின் முதற் தொழிற்சங்கமாக கருதப்படுகிறது. இந்த தொழிற்சங்கம் உருவான இரு ஆண்டுகளுக்குப் பின்புதான் இங்கிலாந்தில் தொழிற்சங்கங்கள் உருவாகத் தொடங்கின. பத்து மணி நேர வேலை நாள் என்ற கோரிக்கையை முதன் முதலாக வைத்த பெருமை இச்சங்கத்துக்கே உண்டு. 1827-ல் பிலடெல்பியாவில் கட்டிடங்கட்டும் தொழிலாளர்கள் நடத்திய வேலைநிறுத்தத்தில்தான் இந்தக் கோரிக்கை பிரதானமாக வைக்கப்பட்டது. 1834-ல் நியுயார்க்கில் ரொட்டி தொழிலாளர்கள் எகிப்திய அடிமைகளைக் காட்டிலும் அதிகம் துன்புற்றனர்.

நாளொன்றுக்கு அவர்கள் பதினெட்டிலிருந்து இருபது மணி நேரம் வேலை செய்ய வேண்டி வந்தது என்ற செய்தியை அப்போது வெளியான 'தொழிலாளருக்காக வாதிடுபவன்' (Workingmen's Advocate) என்ற பத்திரிகை வெளியிட்டது. பத்துமணி நேர வேலை நாளுக்கான இப்போராட்டங்கள் விரைவிலேயே ஒரு இயக்கமாக உருவெடுத்தன. 1837-ல் ஏற்பட்ட நெருக்கடி ஒரு தடையாக இருந்தபோதிலும் வேன் பியுரன் தலைமையிலான அரசாங்கம், அரசு ஊழியர்கள் அனைவருக்கும் பத்து மணி நேர வேலைநாள் அறிவித்தது. எல்லோருக்கும் பத்து மணி நேர வேலை நாள் என்பதற்காக போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. பல தொழிற்சாலைகளில் இக்கோரிக்கை வெற்றியடைய, உடனேயே தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை நாள் என்ற கோஷத்தை எழுப்பினர்.

இவ்வாறு குறைந்த வேலை நேரத்துக்கான போராட்டம் அமெரிக்காவில் மட்டும் நிகழவில்லை. முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளர்கள் சுரண்டப்பட்ட எல்லா வளரும் நாடுகளிலும் இப்போராட்டங்கள் நிகழ்ந்தன. உதாரணமாக வெகு தூரத்தில் இருந்த ஆஸ்திரேலியாவில் கட்டிடத் தொழிலாளர்கள் '8 மணி நேர வேலை, 8 மணி நேர பொழுதுபோக்கு, 8 மணி நேர ஓய்வு' என்ற கோரிக்கையை முன் வைத்து 1858-ல் அதை அடைவதில் வெற்றியும் பெற்றனர்.

1884-ல் அமெரிக்காவில் 8 மணி நேர இயக்கத்தின் போது வெடித்த போராட்டங்கள்தான் மே தினம் உருவாவதற்கு நேரடியான காரணமாய் அமைந்தன. ஆனாலும் இதற்கு ஒரு தலைமுறை முன்பே 'தேசிய தொழிற்சங்கம்' குறைந்த வேலை நேரத்துக்கான கோரிக்கையை முன்வைத்து பரந்த இயக்கத்தையே நடத்தியது. 'தேசிய தொழிற் சங்கம்' அமெரிக்க தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குணமிக்க ஸ்தாபனமாக அப்போது விளங்கியது. 1861-62-ல் உள்நாட்டுப் போர் தொடங்கியது. இதற்கு சற்று முன்பே தொடங்கப்பட்ட வார்ப்பட அச்சு தொழிலாளர் சங்கம், இயந்திர தொழிலாளர்கள் சங்கம், கொல்லர்கள் சங்கம் போன்ற தேச-ிய தொழிற்சங்கங்கள் அப்போது மறை-



றயத் தொடங்கின. ஆனபோதிலும் அதற்கடுத்த சில ஆண்டுகளில் பல உள்ளூர் தேசிய தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்த வேண்டிய அவசியமும் எழுச்சியும் உருவானது. இவ்வாறு பல தொழிற்சங்க பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து 1866, ஆகஸ்ட் 20-ஆம் நாள் பால்டிமோர் என்னுமிடத்தில் தேசிய தொழிற்சங்கத்தை உருவாக்கினார்கள். இதன் தலைவராக வில்லியம் எச். சில்விஸ்தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் மாற்றியமைக்கப்பட்ட வார்ப்பட அச்சு தொழிலாளர் சங்கத்தின் தலைவராவார். தொழிற்சங்க இயக்கத்தில் முக்கியமானவராய் கருதப்பட்ட இவர் ஒரு இளைஞர். இவர் லண்டனில் இருந்த முதலாவது இன்டர் நேஷனல் தலைவர்களோடு தொடர்பு கொண்டிருந்தார். இதன் காரணமாக தேசிய தொழிற்சங்கத்துக்கும் இன்டர்நேஷனலின் பொதுக்குழுவுக்கும் இடையே உறவை ஏற்படுத்த அவரால் முடிந்தது. 1875-ம் ஆண்டு சுரங்க தொழிலாளர் சங்கங்களை அழிக்கும் பொருட்டு தீவிர போர்க்குணமுள்ள பத்து தொழிலாளர்களை சுரங்க அதிபர்கள் தூக்குமரத்திலேற்றினார்கள்.

அமெரிக்க தொழிற்துறை மற்றும் உள்நாட்டு சந்தை 1880-90-க்கு இடைப்பட்ட பத்தாண்டுகளில் தீவிர வளர்ச்சியடைந்தது. ஆனபோதிலும் 1884-85-க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் ஒரு மந்த நிலை நிலவியது. இந்நிலை 1873-ல் ஏற்பட்ட நெருக்கடியின் தொடர்ச்சியாகும். அப்போது வேலையில்லா திண்டாட்டமும் மக்கள் துன்பமும் பெருகியது. இது குறைவான வேலை நாளுக்கான இயக்கத்திற்கு உந்துதல் சக்தியை தந்தது. 1877-ல் மிகப பெரிய வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. இதில் பத்தாயிரக்கணக்கில் சாலை, ரெயில்வே, மற்றும் உருக்குத்தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் அரசாங்கத்தையும் நகராட்சியையும் எதிர்த்து தீவிர போர்க்குணத்தோடு போரிட்டனர். இவர்களுக்கெதிராக இராணுவம் ஏவப்பட்டது. தொழிலாளர்கள் தொடர்ந்து போராடினர். இப்போராட்டம் தொழிலாளர் இயக்கம் முழுமைக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அமெரிக்க தொழிலாளி வர்க்கத்தின் முதல் மாபெரும் தேசிய அளவிலான வெகுஜன இயக்கமாக விளங்கியது. அரசு மற்றும் முதலாளிகளின் கூட்டுச் சதி காரணமாக இவ்வியக்கம் தோற்கடிக்கப்பட்டது.

1885-ல் கூட்டமைப்பு மாநாடு அடுத்த ஆண்டு மே முதல் நாள் வேலை நிறுத்தம் செய்வது பற்றி மீண்டும் எடுத்துரைத்தது. பல தேசிய சங்கங்கள் போராட்டத்துக்கான தயாரிப்புகளில் இறங்கின. குறிப்பாக மரவேலை மற்றும் சிகரெட் தொழிலாளர்கள் தயாரிப்புகளில் இறங்கினார். இந்த போராட்டத்தின் காரணமாக அப்போதிருந்த தொழிற்சங்க உறுப்பினர் எண்ணிக்கை வேகமாக வளர்ந்தது. கூட்டமைப்பைக் காட்டிலும் பிரபலமாக விளங்கிய 'நைட்ஸ் ஆப் லேபரின் உறுப்பினர் எண்ணிக்கை 20 இலட்சத்திலிருந்து 70 இலட்சத்திற்கு உயர்ந்தது. வேலை நிறுத்தத்திற்கான நாள் நெருங்க நெருங்க 'நைட்ஸ் ஆப் லேபர்' அமைப்பின் தலைமை, குறிப்பாக, டெரன்ஸ் பௌடர்லி என்பவன் நாச வேலைகளில் இறங்கினான். தன்னுடன் இணைந்துள்ள தொழிற்சங்கங்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டாமென இரகசியமாக அறிவுறுத்தினான்.

'நைட்ஸ் ஆப் லேபர்' ஸ்தாபனத்தின் நாச வேலை இருந்த போதிலும் 8 மணி நேர வேலை நாளுக்கான போராட்டத்தில் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள் என கணக்கிடப்படுகிறது. சிக்காகோவில் மே முதல் நாள் வேலை நிறுத்தம் மிகத் தீவிரமாக இருந்தது. அப்போது இடதுசாரி தொழிலாளர்கள் இயக்கத்தின் ஒரு மையமாக சிக்காகோ திகழ்ந்தது. தொழிலாளர் இயக்கத்தின் அரசியல் ரீதியான பல்வேறு பிரச்சினைகள் குறித்து போதுமான தெளிவு இல்லாவிட்டாலும் அது ஒரு போராட்ட இயக்கமாக விளங்கியது.

மே முதல் நாள் சிக்காகோ, நகரத் தொழிலாளர் இயக்க ஸ்தாபனம் அழைப்பு கொடுத்ததன் பேரில் ஏராளமான தொழிலாளர்கள் தங்கள் கருவிகளை கீழே வைத்துவிட்டு தெருவுக்கு இறங்கிய மாபெரும் காட்சியைக் கண்டது. இந்த ஆர்ப்பாட்டம் முன் எப்போதுமில்லாத வகையில் மாபெரும் வர்க்க ஒற்றுமையாக விளங்கியது. எட்டு மணி நேர வேலை நாள் கோரிக்கையின் முக்கியத்துவமும், வேலை நிறுத்தத்தின் பரந்த மற்றும் தீவிரத்தன்மையும் இந்த இயக்கத்திற்கு குறிப்பிடத்தக்க அரசியல் முக்கியத்துவத்தைத் தந்தது. அடுத்த சில நாட்களில் ஏற்பட்ட சில மாற்றங்களால் இந்த முக்கியத்துவம் மேலும் தீவிரமானது. 1886 மே முதல் தினம் உச்சக் கட்டத்தையடைந்த 8 மணி நேர இயக்கமானது, அதே நேரத்தில் தொழிலாளர்களின் விரோதிகள் வெறுமனே இருக்கவில்லை. முதலாளிகள் மற்றும் அரசின் இணைந்த சக்தி, ஊர்வலம் சென்ற சிக்காகோ தொழிலாளர்களைக் கைது செய்தது. போர்குணமிக்க தலைவர்களை அழித்தொழிப்பதன் மூலம் சிக்காகோ நகரின் தொழிலாளர் இயக்கத்தையே நசுக்கி விடலாம் என கண்டார்கள். மே 3, 4 திகதிகளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் 'வைக்கோல் சந்தை (ஹே சந்தை) விவகாரம்' என்றழைக்கப்படும் நிகழ்ச்சிக்கு வழி வகுத்தன.

11 ஆம் பக்கம் பார்க்க....

இரணியன்

# ஊடகத்துறையில் ஒரு வரலாற்று நாயகன் மாமனிதர் சிவராம்

ஊடகவியலாளரும் அரசியல் ஆய்வாளருமாகிய மாமனிதர் தர்மரத்தினம் சிவராம் 15ஆம் ஆண்டு நினைவுகூறல் வவுனியாவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு வவுனியா, தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அச்சங்கத்தின் அலுவலகத்தில் அன்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

தமிழ் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சு.வரதகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மறைந்த ஊடகவியலாளர் தராகி சிவராமின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் ஊடகவியலாளர்களினால் மெழுகுதிரி ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

"தராக்கி" என அழைக்கப்படும் மாமனிதர் சிவராம் ஒரு தமிழ் ஊடகவியலாளர். இப்படித் தான் பலரும் இவரை அறிந்து வைத்துள்ளார்கள். ஏன் ஈழத்தமிழ் மக்கள் பலரும் கூட அவ்வாறு தான் அறிந்துள்ளார்கள். ஆனால் உண்மையில் சிவராம் என்பவர் யார் நீண்ட நெடிய தமிழ் மக்களின் வரலாற்றில் தற்கால தமிழ் மனிதனாக அவர் செலுத்திய உழைப்பு என்ன என்பதை தற்போதைய இளம் தலைமுறையினருக்கு கொண்டு செல்வது எமது முக்கிய பணியாகிறது.

## விடுதலைப் போராளியாக..!

இலங்கைத் தீவில் நிலவி வந்த தமிழ் மக்கள் மீதான சிங்கள பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிராக 1972 ஆம் ஆண்டே தமிழரின் ஆயுத எதிர்ப்பு இயக்கம் தோற்றம் பெற்றது. சிவராம் தன்னை தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தில் (PLOTE) தன்னை ஒரு போராளியாக இணைத்துக் கொண்டார். 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரம் ஆயிரக்கணக்கான தமிழர்களை பலி வாங்கியது. 2 இலட் சத்திற்கும் மேலான தமிழர்கள் தங்கள் உடைமைகளை இழந்து அகதிகளானார்கள்.

இது கறுப்பு ஜூலை கலவரம் எனவும் வரலாற்றில் அழைக்கப்படுகிறது. சிங்கள பேரினவாதத்தின் தாங்க முடியாத அடக்குமுறைகளால் தமது தலை விதியை தாமே தீர்மானிக்க முடிவு செய்த தமிழ் இளைஞர்கள் சாரை சாரையாக விடுதலை இயக்கங்களில் இணைந்து போராட தொடங்கினர்.

சிவராம் பின்னர் புளொட் அமைப்பின் தேர்தல் அணியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (DPLF) பொதுச்செயலாளராகவும் நியமிக்கப்பட்டார். கருத்து வேறுபாடு காரணமாக புளொட் அமைப்பில் இருந்து வெளியேறினார்.

## "தராக்கி"

அமைப்பில் இருந்து வெளியேறிய சிவராம் அவர்கள் "சர்வதேச செய்திச் சேவை" நிறுவனத்தில் செய்தியாளராக பணியில் சேர்ந்தார். அதன் பிறகு பல்வேறு பத்திரிகைகளில் பணியாற்றிய சிவராம் ஒரு சிறந்த அரசியல் - இராணுவ ஆய்வாளரும் ஆவார். பல்வேறு இலங்கை நாளிதழ்களில் அவருடைய அரசியல் ஆய்வுக் கட்டுரைகளும், தலையங்கங்களும் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்தன. ஆரம்ப காலங்களில் "தராக்கி" எனும் புனை பெயர் தாங்கி தான் அவரது கட்டுரைகள் வெளியாகின. அதனால் தான் அவர் "தராக்கி" சிவராம் என அழைக்கப்படுகிறார். தாரகா என்றால் நட்சத்திரம் என்று பொருள். தாரகா எனும் பெயரைத் தழுவியது தான் "தராக்கி" எனும் அவரின் புனை பெயர்.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆழமாக நேசித்தவர் மாமனிதர் சிவராம். ஈழத் தமிழ்த்தேசிய இனத்தின் மீதான சிங்கள பேரினவாத அரசின் பயங்கரவாத நடவடிக்கைகளை சர்வதேச அரசியல் அரங்கில் அம்பலப்படுத்தியவர்.

## விடுதலை இயக்கத்தை சிதைத்த பீகான் திட்டம் (Project Beacon)

ஈழத்தமிழரின் விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை நிர்மூலமாக்கி தமிழ் இனத்தை அடிமைப்படுத்தும் நோக்கோடு அமெரிக்கா-இந்தியா-சிங்களம் மற்றும் மேற்குலக நாடுகளால் வரையப்பட்ட பீகான் திட்டத்தை அம்பலப்படுத்தியவர் மாமனிதர் சிவராம் ஆவார். இதை விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் யோகி அவர்கள் 2008 ஆம் ஆண்டு நிகழ்த்திய "பொங்கு தமிழ்" உரையிலும் உலகத் தமிழர்களுக்கு இச்சதித் திட்டத்தைப் பற்றி வெளிப்படுத்தினார்.




"சர்வதேசத்தின் சதியை முன்னுணர்ந்த சிவராம் புலிகளை இலங்கை இந்திய அரசுகளால் மட்டுமல்ல யாராலும் சண்டையிட்டு அழிக்க முடியாது. ஆனால் அனைவரினதும் பின்கதவு கூட்டு சதியும் சூழ்ச்சியும் துரோகமும் அவர்களை அழிக்கலாம்" என்று கூறினார்.

## சிவராமின் பார்வையில் தமிழகம்

சிவராம் அவர்களுக்கு தமிழ்நாட்டின் அரசியல் குறித்தும் நன்கு பரிச்சயம் இருந்தது. அவரின் தமிழ் இராணுவவியல் (On Tamil militarism) எனும் ஆங்கில ஆய்வுத் தொடர் மிகவும் முக்கியமானதாகும். தமிழ்நாட்டின் புரட்சிகர இயக்கங்கள் குறித்தான சரியான மதிப்பீடுகளையும் அவரின் கட்டுரைகளில் காணலாம். விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டில் தங்களுக்கான உண்மையான நண்பர்களாக தமிழ்நாடு விடுதலைப் படையையும் புரட்சிகர மா-லெ இயக்கத்தையுமே நம்ப முடியும் என்று 1989 ஆம் ஆண்டே தனது கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார் சிவராம். 2009 ஆம் ஆண்டு நடந்த ஈழ இனப்படுகொலையின்போது சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளின் துரோகத்தை கண்ட புலிகள் அதை உணர்ந்திருப்பர்.

## மாமனிதரான சிவராம்!

சிங்கள புலனாய்வுத்துறையால் கடத்தப்பட்ட சிவராம் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் சடலமாகத் தான் மீட்கப்பட்டார். இவரின் தேசியப் பணிக்கு மதிப்பளிக்கும் வகையில் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் ஈழ தேசத்தின் அதியுயர் விருதான "மாமனிதர்" பட்டத்தை வழங்கி பெருமைப் படுத்தினார். பல்வேறு சர்வதேச ஊடகவியலாளர்களின் அமைப்புகளும் சிவராமின் படுகொலைக்கு தங்களது கடுமையான கண்டனங்களை பதிவு செய்தது.

"தமிழ்த்தேசியமானது தமிழ் பேசும் சமூகத்தின் அகமுரண்பாடுகளைத் தீர்த்து அதை சரியான அரசியல் பாதையில் அணிதிரட்டிடக்கூடிய ஒரு கருத்தியலாக வளர்த்தெடுக்கப்படாமல் அதன் பாட்டிலேயே விடப்படுமானால் சந்தர்ப்பவாதிகளின் நுனி நாவில் புரட்டப்படும் ஒரு வெற்றுச் சொற்றொடராக அது இருக்குமாயின் - எதிர்காலத்தில் மீண்டும் நேரடியாகவோ மறை முகமாகவோ ஏற்படபோகும் இன அழிப்புப்போர் அச்சுறுத்தல் கூட எமது சமூகத்தை ஒன்று திரட்டுவதற்கு போதாததாகிவிடும்"

என்னும் இந்த மாமனிதனின் எச்சரிக்கையை உள்வாங்கிசெயல்பட்டால் தான் தமிழ்நாட்டுத் தமிழர்களும் - ஈழத்தமிழர்களும் விடுதலைப் பாதையில் நடைபோட முடியும்.

சுழியோடி



# ஆபாசத்தில் பலரையும் மிரட்டி ஆட்டையை போடும் சமூக வலையத்தளங்களை கண்டுப்பிடிப்பது எப்படி? – சட்டத்தரணி




**கடந்தவார தொடர்ச்சி...**

சரியாக அந்த பையனிடம் என்னுடைய தொலைபேசி கொஞ்சம் பழுதாய் போய்விட்டது செய்து தர முடியுமா என்று ரோங் கோல் தான் எடுத்தேன். அந்த பையன் சரி நான் வீட்டில் தான் நிற்கின்றேன் வாங்க செய்து தாறேன் என்றார். சரியென்று போனை கொடுப்பது போல் தான் CID அவரின் வீட்டிற்கு சென்றார்கள். சென்றதும் CID யிலிருந்து வந்திருக்கின்றோம் என கூறி அவரின் வீட்டிலிருந்த Lap Tops, Phones எல்லாவற்றையும் எடுத்து பார்க்கும் பொழுது அதே நேரம் அந்த புகைப்படங்கள் அவரிடம் இருந்தது. அந்த இடத்திலே அவரை கைது செய்து சிறைச்சாலைக்கு அழைத்துச்சென்று குறிப்பிட்ட காலம் தடுப்பில் இருந்தார். அதன் பின்னர் அவர் பிணையில் வந்துவிட்டார். ஆனால் முறைப்பாடு இன்னும் தள்ளிப்போடப்பட்டுள்ளது.

இந்த விசாரணையிலுள்ள விடயம் என்னவென்றால் இதில் இரண்டு மூன்று விடயங்களை செய்யலாம். அனேகமாக ஹெக்கர்ஸ் யாராக இருக்கிறார்கள் என்றால் பல வழக்குகளில் உங்களுக்கு தெரிந்தவர்களாகத் தான் இருக்கின்றார்கள். என்ன காரணம் என்றால் இன்று அனைவரின் கையிலும் சிமார்ட் போன் இருந்தாலும் போன் பற்றிய அறிவு பல பேரிடம் இல்லை. ஈ மெயிலை எப்படி தொடங்குவது அப்ஸ்களை எவ்வாறு டவுன்லோட்செய்வது என்று தெரிவதில்லை. இதை யாரோ ஒருவரிடம் கொடுத்து தான் செய்கின்றார்கள். அவ்வாறு செய்யும் பொழுது அவர் தான் ஈ மெயில் கிரியேட் பன்ன போகின்றார் அவர் தான் பாஸ்போர்ட் கிரியேட் பண்ணப்போகின்றார்.

இந்த ஹெக்கரும் அதே போல் அவர் தான் கிரியேட் பண்ணியிருக்கின்றார். ஆனால் கிரியேட் பண்ணிவிட்டு அவர் அதோடு விடவில்லை, அந்த பெண்ணினுடைய குடும்பத்திலுள்ள வேறு ஆக்களினுடைய எல்லாவற்றையும் ஒருவகையாக ஹெக் பண்ணி எத்தனையோ பேரின் வாழ்க்கையை அவர் அழித்திருக்கின்றார். ஆகவே முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் நீங்கள் ஒரு சிமார்ட் போன் பாவிக்கின்றீர்கள் என்றால் இன்னொருவரிடம் கொடுத்து ஈ மெயில் ஐடியை கிரியேட் பன்னாதீர்கள், பாஸ்போர்ட் கிரியேட் பன்னாதீர்கள். அப்படி நீங்கள் கிரியேட் பன்னினால் கூட பின்னர் மாற்றிக்கொள்ளலாம் என்று கூட சொல்ல முடியாது. ஏனென்றால் அதற்கு ஒரு படிமுறை இருக்கின்றது வெரிபை செக்கிரியூடிக்கு ஒரு போன் நம்பர் கொடுத்திருப்பீர்கள் அந்த நம்பர் யாருடையது என்று கூட செக் பன்னி பார்க்க மாட்டீர்கள். ஆனால் அந்த ஹெக்கர்ஸ் அல்லது உங்களுக்கு உதவி செய்தவர்களினுடைய போனுக்கு தான் போகப்போகின்றது.

இப்படியான சில விடயங்கள் தொடர்ச்சியாக நடந்து கொண்டு வருகிறது. தொடர்ச்சியாக ஒரு வழக்கு இரண்டு வழக்குகள் இல்லை தொடர்ச்சியாக இந்த மாதிரியான வழக்குகளை கேள்விப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அதற்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். இதைத் தவிர வேறு வகையான ஹெக்கிங் என்று சொன்னால் உதாரணமாக இன்னுமொரு வழக்கைப்பற்றி சொன்னால் இது என்னுடைய வழக்கு இல்லை. நடந்த ஒரு வழக்கு தான். 18 வயது ஒரு பையன் அவனுக்கு முகப்புத்தகம் வழியாக பெண் ஒருவரிடமிருந்து ரிக்குவஸ்ட் வருகின்றது. உங்களுக்குத் தெரியும் ஒரு சின்ன பையன் பெண்ணிடம் இருந்து ரிக்குவஸ்ட் வருகின்றது என்று மிகவும் மகிழ்சியுடன் அதை ஏற்றுக்கொள்கின்றார். சட் பன்னிக்கொண்டு செல்லும் பொழுது ஒரு கட்டத்தின் பின் நான் வீடியோ அழைப்பில் உன்னுடன் கதைக்க வேண்டும் என்று கேட்கின்றார். சாதாரணமாக அவர் முகப்புத்தகத்தை ஓபன் பண்ணுகின்றார் வெப் பேஜ் வருகிறது பாஸ்வேல்ட் அன்ட் ஈமெயில் ஐடி எரர் காட்டுகிறது. முயற்சி செய்து முயற்சி செய்து பார்த்ததற்கு பின் சரி பரவாயில்லை அடுத்த நாள் கதைப்பம் என்று அந்த பெண் கூறுகின்றார். அடுத்த நாள் சட்டிங் எப்படி இருக்கப்போகின்றது அவாவின் முகத்தைப் பார்க்கப்போகின்றேன் என்று நினைத்துக்கொண்டு சந்தோஷமாக தூங்கப்போகின்றார். இந்த நிலையில் அவரிற்கு அடுத்த நாள் ஒரு பெரிய பிரச்சனை வருகிறது எப்படியென்றால் அவரின் பேஸ்புக் முழுமையாக ஹெக் பண்ணப்பட்டு கொன்றோலில் இல்லாமல் போகிறது அந்த நேரத்தில் அவரின் பேஸ்புக்கை பயன்படுத்தி அதிலிருந்து அசிங்கமான செய்திகள் பரிமாறுகிறது அந்த நேரம் அவரின் ஸ்கைப்பிலிருந்து அவருக்கு ஒரு அழைப்பு வருகிறது உன்னுடைய பேஸ்புக்கின் ஐடி அன்ட் பாஸ்வேல்ட் தரவேண்டுமாக இருந்தால் நான் சொல்வதை செய்ய வேண்டும் என்று.

இவ்வாறு நிறைய விடயங்கள் நடக்கலாம் அதை தவிர உங்களுடைய அனுமதி இல்லாமல் உங்களுடைய புகைப்படங்களை எடுத்து அதை எடிட் பன்னி தேவையில்லாதமாதிரி போட முடியும். இவ்வாறு பல விடயங்களுக்கு முகங்கொடுக்கலாம். இந்த மாதிரியான விடயங்களை தவிர்த்துக்கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று நான் சொல்லுகின்றேன். ஆரம்பத்திலே நான் கூறினேன் CID யிடம் சென்று பிரச்சனையை கூறுவது சாதாரணமாக பொலிஸிடம் பிரச்சனையை கூறுவது போன்று இலகுவானதல்ல என்று. இது ஒரு இரண்டு வருடங்களுக்கு முன்னர் இருந்தது ஒன்று. ஆனால் தற்பொழுது அது நல்ல அக்டிவான பாதுகாப்பான சூழல் உருவாகிக்கொண்டு வருகிற மாதிரியான சந்தோஷமான விடயத்தை உங்களுக்கு கூறுகின்றேன்.

இதற்கு நீங்கள் போக வேண்டிய முதலாவது இடம் என்னவென்றால் SLCERT ஆகும். SLCERT என்றால் ஸ்ரீலங்கா கொம்பியூட்டர் எமர்ஜன்சி ரெஸ்போன்ஸ் டீம். அதாவது உங்களுக்கு இவ்வாறான பிரச்சனைவந்தால்அவசரமாகநீங்கள்போக வேண்டிய இடம் SLCERT. இதுவொரு அரசாங்க நிறுவனம் இதுவொரு தனிப்பட்ட நிறுவனம் இல்லை. யாருடன் பார்ட்னசாக வேக் பன்றாங்க என்றால் சர்வதேச அளவில் அதற்கு எத்தனையோ நிறைய பார்ட்னஸ் இவர்களுடன் மெம்பர்சிப்பாக இருக்கிறார்கள். உங்களுக்கு ஏதும் பிரச்சனை வந்தால் அவசரமாக நேரடியாக அவர்களின் நிறுவனத்திற்கு செல்லமுடியும், அல்லது அவர்களுக்கு டக்ஸ் பண்ணலாம், ஈமெயில் பண்ணலாம், கோல் பண்ணலாம் டிஸ்கிரிப்சனில் நான் அவர்களுடைய போன் நம்பர் எல்லாம் கொடுத்திருக்கின்றேன் நீங்கள் பார்க்கலாம்.

ஹெக்கர் எங்கு இருக்கிறார் என்று உங்களுக்கு கண்டுபிடித்து கூறுவார்கள் உங்களுடைய முகப்புத்தகம் ஹெக் பண்ணப்பட்டு விட்டது என்றால் அந்த ஹெக் பண்ணப்பட்ட பேஸ்புக்கை ரிலீஸ் பண்ணுவதற்கு சொல்லித்தருவார்கள். அதைவிட உங்களுடைய புகைப்படங்கள் வீடியோக்கள் அதை ரீக்குவர் பன்னுவது, ரிமூவ் பன்னுவது போன்ற விடயங்களை செய்து தருவார்கள். இவர்கள் லீகல் அக்சன்ஸ் எதுவும் எடுக்க மாட்டார்கள் அதாவது கோர்ட்டுக்கு போய் உங்களுடைய பிரச்சனைக்கு தீர்ப்பு வாங்கித்தருவது இவர்களின் வேலையில்லை. இவர்கள் இன்டர்நெட் டெக்னீசியன்ஸ் ,இன்டர்நெசனல் பார்ட்னர்ஸ் இவர்களுக்கு இருக்கின்றார்கள் ஆகவே அனைவரதும் உதவியுடனும் அந்த ஹெக்கரை நாட்டினுள்ளேயோ அல்லது நாட்டிற்கு வெளியேயோ அவர்கள் ஐடின்டிபை செய்துகொள்வார்கள். பண்ணினதன் பின்னர் சைபர் கிரைம் உடன் இணைந்து அவர்களுக்கு உங்களின் மெசேஜ்யை பரிமாறினதும் சைபர் கிரைம் நிறுவனம் உங்களுக்கு தேவையான வழக்கை தொடுக்கின்றது.

ஆகவே இறுதியாக உங்களுக்கு கூற வேண்டிய விடயம் என்னவென்றால் உலகத்திலுள்ள நாடுகளில் சைபர் செக்கியூரிட்டி என்று சொல்லும் பொழுது சைபர் இன்டர்ஜிலியன்ட், சைபர் ஆர்மி பற்றி கதைக்கும் பொழுது. சைபர் செக்கியூரிட்டி பற்றிய விளிப்புணர்வு கூட எங்களுக்கு இருக்கிறதா என்பது தெரியாது ஆகவே தான் நான் இந்த விடயம் பற்றி உங்களுடன் பகிர்ந்துள்ளேன். பல விடயங்கள் நடந்துகொண்டு இருக்கின்றது. ஆனால் இதை ரிப்போர்ட் பண்றது எங்கே போவது என்ன செய்வது என்று மக்களுக்கு தெரிவதில்லை. ஆகவே இவ்வாறான பிரச்சனைகள் ஏற்பட்டால் அதை பொறுத்துக்கொள்ளாதீர்கள் கட்டாயமாக இதை முறைப்பாடு செய்யுங்கள். ஏனென்றால் இது மானங்களுடன் விளையாடப்படுவது, ஒருமுறை போனால் திருப்பி வராது.

எனவே உங்களுக்கு அப்படியாக அநியாயம் ஏதும் நடந்தால் அது திருப்பி யாருக்கும் நடக்ககூடாது என்பதற்காக கட்டாயம் நடவடிக்கை எடுங்கள். நேரடியாக போங்க பௌத்தலோகா மாவத்தையில் DMICH இருக்கிறது அங்கு ஒரு ரூம் இருக்கிறது, அங்கு தான் SLCERT ஒபிஸ் இருக்கிறது. டிஸ்கிரிப்சனில் அட்ரஸ் போன் நம்பர் ஈமெயில் ஐடி போன்றவற்றை நான் உங்களுக்கு தந்திருக்கின்றேன். அதே போல் சைபர் கிரைம் பற்றி டிஸ்கிரிப்சனில் தந்திருக்கின்றேன் அதையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

நேரடியாக அவர்களிடம் போங்கள் உங்களின் பிரச்சனையை கூறுங்கள் பேஸ்புக் ஏதும் ஹெக் பன்னியிருந்தால் அவர்களின் உதவியுடன் அதை ரிமூவ் பண்ணுங்க உங்களுடைய வீடியோ படங்கள் ஏதும் இருந்தால் அதை ரிமூவ் பன்னுங்க அவசரமாக உங்களின் மானத்தை பாதுகாத்துக்கொள்ளுங்கள். லீகள் ஆக்சன் எடுக்காமல் விடாதீங்க உங்களுக்கு தெரியும் சாதாரணமாக உங்களின் அனுமதியில்லாமல் ஹெக் பண்ணினால் 6 மாதம் தொடக்கம் 3 வருடங்கள் வரை சிறைத்தண்டனைகள் வழங்கப்படும். இதற்கு கொழும்பு உயர் நீதி மன்றில் தான் வழக்கு தொடுக்கப்படும். ஆகவே கட்டாயம் பாதுகாக்கப்பட வேண்டியது என்னவென்றால் இந்த காலகட்டத்தில் இன்டி வீடியோசை தான் இலங்கையில் டார்கெட் பண்ணுகின்றார்கள். உங்களுடைய மானம் உங்களின் கையில் தான் இருக்கிறது. ஆகவே அனைவரும் கேட்டுக்கொண்டதன்படி நான் சைபர் கிரைம் சோசல் மீடியாவின் ரிலேட்டிவ் பற்றி உங்களுக்கு கூறியுள்ளேன்.

முற்றும்.

# சமூகப் பொருளாதார வீழ்ச்சி தொடருமானால் பட்டினிச்சாவை எதிர்நோக்க நேரிடும்



கடந்த பெப்ரவரி மாதம் இறுதி வாரத்தில் உலகை ஆட்டிப்படைக்கும் கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் இலங்கையையும் தாக்கியது அன்று முதல் அரசு பல ஆக்கப்பூர்வமான நடவடிக்கையில் ஈடுபட்டு கொரோனா தாக்கம் இலங்கையில் கடுமையாக பாதிக்காதவாறு பாதுகாத்தது. இலங்கை கடந்த இரண்டு மாதகாலமாக முடக்கப்பட்ட நிலையில் பொருளாதார சமூக பிரச்சனைகளுக்கு இலங்கை முகங்கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது.

கடந்த இரண்டு வாரத்திற்கு முன்னர் 200 பேர் வரை இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ள நிலையில்லை. சடுதியாக கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் உண்ணிக்கை 500 ஐ கடந்து சென்றது. இவ்வாறான ஓர் சூழ்நிலையில் கொரோனா தாக்கம் ஒருபுறம் பொருளாதார நெருக்கடி மறுபுறம் இலங்கை போன்ற வளர்முக நாடுகள் மிகவும் அல்லாடும் நிலையில் காணப்படுகின்றது. கொரோனாவைரஸானது இன்று வரை சமூக பரவலுக்கு இன்னும் அடியெடுத்து வைக்கவில்லை. அந்த நிலை வரமுன்னர் அதனை கட்டுப்படுத்த அரசு முழு வீச்சுடன் செயற்படுகின்றது தெரிகின்றது.

இந்நிலையில் சமூக பொருளாதார நெருக்கடியானது விஸ்வரூபம் எடுத்துள்ளது. எமது நாட்டுக்கு பொருளாதார ரீதியில் கை கொடுக்கும் துறைகள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சுற்றுலாத்துறை எமது நாட்டின் பொருளாதாரத்தில் மிகப் பெரிய பங்கு வகிக்கும் அதேவேளை பெருந்தோட்ட ஏற்றுமதியான தேயிலை, இறப்பர், தெங்கு போன்றவற்றின் ஏற்றுமதியும் கணிசமான அளவு குறைந்துள்ளது. இது ஒரு புறமிருக்க கைத்தொழில் துறையில் மிகப்பெரும் பங்கு வகிக்கும் ஆடைத் தொழிற்சாலைகளின் முடக்கமானது பெரும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியதுடன் அங்கு வேலைபுரியும் பல இலட்சக்கணக்கானோரின் வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகியுள்ளது. மேலும் விமானப் போக்குவரத்து முடக்கம் அரச போக்குவரத்து சேவைகளின் முடக்கம் மதுபானசாலைகளின் முடக்கம் போன்ற பல பொருளாதார முடக்கமானது சமூக ரீதியிலான பிரச்சனையாக உருவெடுத்து வருகின்றது. மதுபானசாலைகள் மூடப்பட்டதால் கிராமங்களில் கசிப்பு காய்ச்சும் நடவடிக்கை அதிகரித்து செல்லுகின்றது. இதனால் குடும்ப வன்முறைகள் அதிகரித்து செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. இது ஒருபுறமிருக்க கடலுணவு ஏற்றுமதியானது 80 வீதம் தடைப்பட்டுள்ளது. இதனால் மீனவ சமூகம் மிகவும் நெருக்கடியை சந்திக்க உள்ளது. உயிரை வெறுத்து கடலில் இறங்கி மீன் பிடித்து தமது வயிற்றையும் குடும்பத்தையும் காப்பாற்றும் இந்த மீனவ சமூகம் தற்பொழுது பிடிக்கின்ற மீன்களை நாட்டுக்குள் உள்ள பிரதேசங்களுக்கு கூட ஏற்றுமதி செய்ய முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இதனால் மீனவ சமூகம் பட்டினிக்கதவை நோக்கி செல்வதும் அவல நிலை ஏற்படவாய்ப்புள்ளது.

மேலும் விவசாயிகளின் நிலைமையும் இதே நிலைதான் காணப்படுகின்றது. விவசாயிகள் பயிரிடப்படும் பயிர்களின் மரக்கறிகளை தகுந்த சந்தை வாய்ப்பின்றி மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் உள்ளனர். கடந்த சில நாட்களாக வரும் செய்திகளை பார்க்கும் பொழுது மிகவும் மனவேதனையாக உள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற வடகிழக்கு மாகாணங்களில் பயிரிடப்படும் மரக்கறிகள் சந்தை வாய்ப்பின்றி தோட்டங்களிலேயே அழுகும் நிலையில் காணப்படுகின்றது. பல விவசாயிகள் மிக மன உளைச்சலுடனும் மன விரக்தியுடனும் காணப்படுகின்றனர். முல்லைத்தீவில் உள்ள ஒரு விவசாயி தனது 14,000 kg பூசணிக்காயினை கொள்வனவு செய்து உதவுமாறு தொலைபேசி இலக்கத்தையும் போட்டு கூறியுள்ளார். இவ்வாறு பல விவசாயிகள் தமது மரக்கறிகளை சந்தையிட முடியாமல் ஏற்றுமதி செய்யமுடியாமல் தவித்து வருகின்றனர். இந்நிலை தொடருமானால் குறித்த விவசாயிகள் தற்கொலை முயற்சியில் இறங்குவார்கள் என்பதில் எந்த ஐயமுமில்லை.


வடகிழக்கில் பல கிராமங்கள் விவசாயத்தை நம்பித்தான் தமது ஜீவனோபாயத்தை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் அவர்களின் பொருட்கள் தகுந்த சந்தை வாய்ப்பின்றிபோனால் அவர்களது குடும்பம் பட்டினிச்சாவை நோக்கி தள்ளப்படுதல் தவிர்க்க முடியாமல் போகும். அரசு வழங்கும் ரூபாய் 5,000 கொடுப்பனவானது எத்தனை நாட்களுக்கு போதுமானது பல அத்தியாவசிய நிவாரணங்கள் அரசு கூறுவது போல் சரியான முறையில் மக்களை அடையவில்லை என்பது உண்மையே. அத்தியாவசிய பொருட்களை அரசு வழங்கினாலும் மேலதிக தேவைகளுக்கு பணம் அவசியமாகின்றது. இவ் நிலையில் அரசு கொடுக்கும் ரூபாய் 5,000 சாதாரணமாக எவ்வளவு நாட்களுக்கு போதுமானது. நெல் செய்கைக்கு தேவையான உரம் மருந்து வகைகள் தான் மானிய முறையில் வழங்கப்படுகின்றது. இவ்வாறு மரக்கறி பயிர்ச் செய்கைக்கு உரம், மருந்து வகைகள் மானிய முறையில் வழங்குவதில்லை பணம் கொடுத்து தான் பெற வேண்டும். இவ்வாறு கஷ்டப்பட்டு விவசாயத்தை மேற்கொண்டால் இக்கால சூழ்நிலையில் தகுந்த சந்தை வாய்ப்பின்றி பல விவசாயக் குடும்பங்கள் அல்லல் படும் சூழ்நிலை காணப்படுகின்றது. இதனை விட மிகவும் மோசமான நிலையில் நாட்கூலி வேலை செய்பவர்களின் நிலைமை மேசன் தொழில் பஸ் நடத்துனர் பஸ் சாரதிகள் விறகு வெட்டும் கூலித் தொழிலாளிகள் விற்பனை பிரதிநிதிகள் என்போர் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் உள்ளனர். இவர்களுக்கு அரசு ரூபாய் 5,000 நிதியினை வழங்கியுள்ளது. அது எந்தளவுக்கு போதுமானது என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள முடியும். அரசும் இப்பொழுது உள்ள சூழ்நிலையில் மக்களுக்கு மேலதிக நிவாரணங்கள் வழங்குவதை மேற்கொண்டு பண உதவிகள் செய்வதோ முடியாத காரியமாக உள்ளது. இப்பொழுது இரண்டு நேர சாப்பாட்டை உண்ணும் இவர்கள் இந்நிலை தொடருகையில் மிக விரைவில் பட்டினிச்சாவை நோக்கி தள்ளப்படுவார்கள்.

தற்பொழுது காணப்படும் இந்த கொரோனா என்னும் வைரஸ் நோய் தாக்கமானது இலங்கையில் இருந்து ஏன் உலகில் இருந்து முற்றாக துடைத்தளித்தாலும் அதன் பின்னர் ஏற்பட இருக்கும் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை எவ்வாறு கையாளப் போகின்றோம் என்பது மிகப் பெரிய கேள்விக்குறியாக உள்ளது. சகல கட்டுமானங்களும் சிதைந்துள்ள நிலையில் மீள இயல்பு நிலைக்கு கொண்டு செல்வதென்பது தற்போதைக்கு சாத்தியப்பட போவதில்லை. எமது நாட்டில் கடந்த முப்பதாண்டு கால கோர யுத்தத்தினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் பல உலக நாடுகள் கைகொடுத்து உதவின. குறிப்பாக சீனா, இந்தியா, அமெரிக்கா , பிரித்தானியா போன்ற நாடுகள் பல உதவிகளை செய்தன. ஆனால் இன்றோ ஒட்டு மொத்த உலகமே பாதிக்கப்பட்ட நிலையில் யார் யாருக்கு உதவுவது என்பதில் தினறிக்கொண்டு உள்ளனர். தமது பொருளாதார நெருக்கடியை தாமே தான் சமாளிக்க வேண்டிய நிலை தற்பொழுது உள்ளது.


இலங்கை சுகாதாரம் கல்வி போன்றவற்றில் அபிவிருத்தி அடைந்தாலும் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் தான் உள்ளது. ஆள்வீத வருமானமானது கடந்த 30 ஆண்டுகால யுத்தத்தில் மிகவும் வீழ்ச்சி அடைந்து காணப்பட்ட நிலையில் யுத்தம் முடிவுற்று கடந்த 10 ஆண்டுகளில் சிறு வளர்ச்சி விகிதத்தை நோக்கி ஆள்வீத வருமானமானது செல்லத் தொடங்கையில் மீண்டும் கொரோனா என்னும் கொடிய நோயினால் ஆள்வீத வருமானமானது யுத்த காலத்தில் ஏற்படாத சரிவை காட்டிலும் தற்பொழுது மிகப் பெரிய சரிவை நோக்கி செல்லுகின்றது. கொரோனா தொற்றானது இலங்கையில் இருந்து முற்றாக ஒழித்ததன் பின்னர் அரசு பொருளாதார சரிவை நிவர்த்தி செய்ய மக்களின் தலையில் அதனை சுமத்த முயற்சிக்கும் என்பது நிச்சயம் இந்நிலையில் மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மதிப்பது போன்ற நிலை மக்களுக்கு ஏற்படும் பொருளாதார சரிவை நிவர்த்தி செய்ய பொருட்கள் மீதான விலை அதிகரித்தல் இறக்குமதி பொருட்களுக்கான வரியை அதிகப்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் பொழுது சாதாரண மக்கள் இதற்கு முகம்கொடுக்க முடியாமல் போகும்.

கொரோனா தொற்றில் தப்பிய மக்கள் பொருளாதார நெருக்கடி அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் மிகவும் துன்பநிலைக்கு செல்லக்கூடும். இப்பொழுது உள்ள நிலைமையை விட பன்மடங்கு மோசமான நிலை உருவாகும். பட்டினிச்சாவு தற்கொலைகள் குடும்ப வன்முறைகள் கொள்ளை சம்பவங்கள் என்பன அதிகரித்து செல்லும் எனவே அரசு இது தொடர்பாக சரியான முறையில் பொருளாதார நெருக்கடியை கையாள வேண்டும் என்பதுடன் சகல கட்சிகளும் அரசுக்கு ஆதரவு கொடுத்து வர இருக்கும் பொருளாதார சமூக நெருக்கடியை தடுத்து ஆபிட்சமான எதிர்காலத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவது காலத்தின் தேவையாகும்.

தாயகத்தான்




# பிராந்தியச் செய்திகள்



## உயர்தரப் பரீட்சைகளை நடத்துவது குறித்து இரண்டு வகைத் திட்டங்கள் பரிசீலனை- மஹிந்த

உயர்தரப் பரீட்சைகளை நடத்துவது தொடர்பாக இரண்டு வகையான திட்டங்களை பரிசீலித்து வருவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



யுனிசெ∴ப் நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறுவர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த போதே பிரதமர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார். மேலும், பாடசாலைகளை விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பாடசாலைகள் திறக்கப்படும் போது முதலாம் தவணைப் பரீட்சைகள் நடத்தப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், நடத்தப்பட்ட பாடத்திட்டங்களின் அடிப்படையில் இரண்டாம் தவணைப் பரீட்சை நடத்தப்படும் எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உயர்தரப் பரீட்சைகளை நடத்துவது தொடர்பாக இரண்டு வகையான திட்டங்களை பரிசீலித்து வருவதாகவும் பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கமைய, உயர்தரப் பரீட்சைகளை ஒத்திவைப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அல்லது பாடத் திட்டத்தின் அடிப்படையில் உயர்தரப் பரீட்சையை நடத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இதுகுறித்த இறுதி முடிவு குறித்து கல்வி அமைச்சு விரைவில் அறிவிக்கும் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

## பருப்பு மற்றும் ரின் மீன் ஆகியவற்றுக்கான உச்சபட்ச சில்லறை விலை நீக்கம்

பருப்பு மற்றும் ரின் மீன் ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்ட உச்சபட்ச சில்லறை விலை நீக்கப்பட்டுள்ளது என நுகர்வோர் விவகார அதிகாரசபை வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



கொரோனா பரவலைத் தொடர்ந்து, கடந்த மார்ச் 17ஆம் திகதி, ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டதற்கு அமைய, ஒரு கிலோ கிராம் பருப்புக்கான விலை 65 ரூபாய் எனவும், 425 கிராம் ரின் மீனின் விலை 100 ரூபாய் எனவும் உச்சபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டது.

மார்ச் 18 முதல் நடைமுறையில் வருவதாக அறிவிக்கப்பட்ட குறித்த அறிவிப்பு தற்போது நீக்கப்படுவதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் அதி விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மே மாதம் 11ஆம் திகதியுடன் கொரோனாவுக்கு முடிவா? சுகாதார பணிப்பாளர் விளக்கம்

இலங்கையில் எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதியுடன் கொரோனா வைரஸ் பரவல் முடிவுக்கு வரும் என தான் ஒருபோதும் கூறவில்லை என சுகாதார பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். மே மாதம் 11ஆம் திகதி கொரோனா வைரஸ் முடிவுக்கு வரும் என்ற கருத்தை வெளியிடவில்லை. ஊடகங்கள் எப்படி அவ்வாறு பதிவிட்டதென்பது எனக்கு தெரியவில்லை. எனினும் கடற்படையினராலேயே உண்மையாக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது.

கடற்படையினர் இருந்த பிரதேசங்களில் ஏதாவது ஒரு வகையில் கொத்துக்கள் ஏற்படவில்லை என்றால் நிச்சயமாக நோயாளிகளின் எண்ணிக்கையில் குறைவொன்றை காண முடியும். கடற்படையினர் சென்ற பிரதேசங்களிற்கமையவே இதன் நிலையை அறிய முடியும். அதனையே நான் கூறினேன். அத்துடன் சமூகத்தில் நோயாளிகளின் எண்ணிக்கை பூஜ்ஜியமாகும் என கூற முடியாது.

சிறிய எண்ணிக்கையிலானோர் அடையாளம் காணப்படலாம். உதாரணமாக நேற்று முன்தினம் தாபர் மாவத்தையில் இரண்டு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் சமூகத்தில் உள்ளவர். அது போன்ற குறைந்த எண்ணிக்கையிலானோரை அடையாளம் காணலாம். எனினும் எங்கே, எப்படி, யாரிடம் இருந்து பரவியது என்ற விடயத்தை எங்களால் அடையாளம் காண முடியும்.

எப்படியிருப்பினும் கொரோனா தடுப்பிற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைக்கமைய பார்க்கும் போது நிலைமை சிறப்பானதாகவே பார்க்க முடியும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## டெங்கு நோய் தொடர்பாகவும் அவதானம் வேண்டும்

வரவிருக்கும் தென்மேற்கு பருவமழை காலத்தில் டெங்கு நோயாளிகளின் அதிகரிப்பு தொடர்பாகவும் நாடு தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு எச்சரித்துள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி 'முழு நாட்டின் கவனமும் இப்போது கொரோனா வைரஸ் தொற்று நோய்களில் உள்ளது எவ்வாறாயினும், வரவிருக்கும் டெங்கு காய்ச்சலுக்கு நாங்கள் தயாராக இருக்க வேண்டும்.



எதிர்வரும் நாட்களில், டெங்குவை ஒழிப்பதற்கும், நுளம்பு இனப்பெருக்கம் செய்யக்கூடிய இடங்களை ஆய்வு செய்வதற்கும் ஒரு திட்டம் செயற்படுத்தப்படும்' என தெரிவித்தார்.

மேலும் மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னர் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாங்கள் எடுக்காவிட்டால், சுகாதார அமைச்சு இரட்டைச் சுமையைச் சுமக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.நாட்டில் டெங்கு பாதிப்பு பற்றிய கடந்தகால புள்ளி விபரங்கள், மே-செப்டம்பர் மற்றும் டிசம்பர்-பெப்ரவரி முதல் பருவமழை காலங்களில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பை காட்டுகின்றன.இலங்கை முழுவதிலும் இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளிகள் சுமார் 11,595 பேர் பதிவாகியுள்ளனர். ஆயினும்கூட, எண்ணிக்கை குறைந்து வருகிறது, ஏப்ரல் மாதத்தில், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் குறைந்த மழைப்பொழிவு காரணமாக 383 டெங்கு நோயாளிகள் மட்டுமே பதிவாகியுள்ளனர்.இருப்பினும், தற்போது நடைமுறையில் உள்ள ஊரடங்கு உத்தரவு காரணமாக பெரும்பாலான நிறுவனங்கள் வெறிச்சோடி காணப்படுவதால், நுளம்பு இனப்பெருக்கம் செய்யும் எண்ணிக்கையும் அதிகரிக்க சாத்தியக்கூறுகள் உள்ளன என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## வவுனியா செட்டிகுளம் பகுதியில் இளம் பெண் மரணம்

வவுனியா செட்டிக்குளம் துடரிக்குளம் பகுதியில் நேற்றிரவு (02.05.2020) 10.00 மணியளவில் கிணற்றில் வீழ்ந்து 21 வயதுடைய இளம் பெண்ணொருவர் மரணம் அடைந்துள்ளார்.



செட்டிக்குளம் பிரதேச சபையில் பணியாற்றும் அரச உத்தியோகத்தரான குறித்த பெண் நேற்றிரவு (03.05.2020) 10.00 மணியளவில் கிணற்றில் வீழ்ந்து தற்கொலைக்கு முயன்றுள்ளார். அவர் கிணற்றில் வீழ்ந்ததினை அவதானித்த உறவினர்கள் அயலவர்களின் உதவியுடன் கிணற்றிலிருந்து அவரை மீட்டெடுத்து வவுனியா செட்டிக்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி குறித்த 21 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார்.

தற்கொலைக்கான காரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன் அவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. திருக்கேதீஸ்வரநாதன் கலைவாணி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்த நபராவர்

## பாடசாலைகளை மீள ஆரம்பித்தல் தொடர்பில் அரசாங்கம் வெளியிட்ட தகவல்

இரண்டாவது தவணைக்காக மீண்டும் பாடசாலைகளை ஆரம்பிக்கும் திகதி இன்னும் தீர்மானிக்கவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜுன் மாதம் 16ஆம் திகதி வரை பாடசாலை ஆரம்பிக்கும் திகதி பிற்போடப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகி உள்ளன. எனினும் அந்த தகவல்களில் உண்மையில்லை என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மே மாதம் 11ஆம் திகதி இரண்டாம் கல்வி தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் என அரசாங்கம் இதற்கு முன்னர் அறிவித்தது.எனினும் நேற்றைய தினம் பாடசாலை ஆரம்பிக்க முடியாதென சிறுவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒகஸ்ட் மாதம் இடம்பெறவிருந்த உயர்தர பரீட்சை தொடர்பில் சிறுவர்கள் பிரதமரிடம் வினவிய போது, அதற்கு இரண்டு மாற்று வழிகள் உள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார். உயர்தர பரீட்சையின் திகதியை மாற்றுவது ஒரு வழியாகும். கற்பித்து நிறைவு செய்த பாடங்களில் இருந்து மாத்திரம் கேள்விகளை தயாரிப்பது இரண்டாவது மாற்று நடவடிக்கையாகும். எப்படியிருப்பினும் இது தொடர்பில் இறுதி தீர்மானத்திற்கு இன்னமும் வரவில்லை என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.



# சினிமா

தல அஜித்குமார் தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரமாக திகழ்பவர். இவரது திரைப்படம் வெளியானால் அதனை திருவிழா போல் கொண்டாடுவார்கள் அவரின் ரசிகர்கள்.

சென்ற வருடம் இவர் நடிப்பில் வெளியான விஸ்வாசம் மற்றும் நேர்கொண்ட பார்வை திரைப்படங்கள் மிக பெரிய வசூல் சாதனைகளை செய்தது.

தற்போது இவர் இயக்குனர் எச்.வினோத் இயக்கத்தில் வலிமை திரைப்படத்தில் நடித்து வந்தார். மேலும் கொரோனா காரணத்தினால் இப்படத்தின் படப்பிடிப்பு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மே 1 இவரது பிறந்தநாள் என்பதால் ட்விட்டரில் இவரின் ரசிகர்கள் பெரிய அளவில் கொண்டாடினர்.

இதில் 24 மணி நேரத்தில் 9 மில்லியன் டுவிட்ஸ் செய்து தென்னிந்திய நடிகர்களில் 2வது இடம், தமிழ நடிகர்களில் முதலிடமும் பெற்றுள்ளனர்.





நடிகர் விஜய் தற்போது தமிழ் சினிமாவின் மிக பெரிய நடிகராக வளர்ந்துள்ளார். மேலும் வசூல் ரீதியாகவும் ரசிகர்கள் ரீதியாகவும் நடிகர் ரஜினிக்கு அடுத்தபடியாக விஜய் தான் உள்ளார்.

சென்ற வருடம் அட்லீ இயக்கத்தில் இவர் நடித்த பிகில் திரைப்படம், ரசிகர்களிடையே நல்ல வரவேற்பையும் பெரிய அளவில் வசூல் சாதனையும் செய்தது.

அதனை தொடர்ந்து இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் மாஸ்டர் திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படத்தின் அப்டேட்டுகாக ரசிகர்கள் அனைவரும் காது கொண்டு இருக்கின்றனர்.

இந்நிலையில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி உள்ளிட்ட பிரபல தொலைக்காட்சிகளில் சென்ற வாரம், இவரின் திரைப்படங்கள் ஒளிபரப்பட்டது. மேலும் அப்படி சென்ற வாரம் ஒளிபரப்பான நிகழ்ச்சிகளில், நடிகர் விஜயின் திரைப்படங்களே டாப்பில் உள்ளது.

1. தமிழ் – வேட்டைக்காரன் – (முதல் இடம்)

2. ஹிந்தி – பைரவா – (இரண்டாம் இடம்)

3. தெலுங்கு – விசில்(பிகில்) – (மூன்றாம் இடம்)

தற்போது கொரோனா அச்சத்தின் காரணத்தினால் நாடுமுழுவதும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் அனைத்து திரையரங்குகளுக்கு மூடப்பட்டுள்ளது. மேலும் மக்கள் அனைவரும் சமூக விலகலை கடைப்பிடிக்க வேண்டுமென்பதால் எனும் ஒரு சில மாதங்களுக்கு திரையரங்குகள் திறக்கப்பட்டது என கூறப்படுகிறது.

இந்நிலையில் மக்கள் அனைவரும் வீட்டிலேயே முடங்கி கிடப்பதால், தற்போது அனைவரின் கவனமும் ழுவுவு பக்கம் திரும்பி வருகிறது.

மேலும் ழுவுவயில் நேரடியாக திரைப்படங்களை வெளியிட திட்டமிட்டுள்ளனர். அப்படி வெளியாகவிருக்கும் திரைப்படங்களின் லிஸ்ட் இதோ,

1. ஆர்.கே.நகர்

2. பொன்மகள் வந்தாள்

3. பரமபதம் விளையாட்டு

4. நரகாசூரன்




சமீப காலமாக வுசீ-காக முன்னணி தமிழ் தொலைக்காட்சிகள் மத்தியில் கடும் போட்டி நிலவி வருகிறது.

ஆனால் கொரோனா சமையத்தில் எந்த ஒரு நிகழ்ச்சியையும் முன்னணி தொலைக்காட்சிகளால் ஒளிபரப்பு செய்ய முடியவில்லை.

இதனால் படங்களையும் இதற்கு முன் ஒளிபரப்பு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளையும் மறுஒளிபரப்பு செய்து வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது இந்த கொரோனாவால் முன்னணி தொலைக்காட்சியான விஜய் டிவியின் வுசீ-யும் மிகவும் கீழே சரிந்துள்ளது.

ஆம் கடந்த ஏப்ரல் 18ஆம் தேதியில் இருந்து ஏப்ரல் 24 தேதி வரை எடுக்கப்பட்ட வுசீ வாக்கெடுப்பில் விஜய் டிவி 3ஆம் இடத்தை பிடித்துள்ளது. மேலும் கே டிவி 2ஆம் இடத்தையும் சன் டிவி 1ஆம் இடத்தையும் பிடித்துள்ளது.

இதனால் முன்னணி தொலைக்காட்சியான விஜய் டிவி மிக பெரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது என்று கூட கூறலாம்.

4வது இடத்தில் ஜீ தமிழ், 5ம் இடத்தில் விஜய் சூப்பர் உள்ளது.

தொகுப்பு :- ஹாசினி




## உங்க உதடுகள் வறட்சி அடைவது ஏன் என்று தெரியுமா?



உடலிலேயே மிகவும் மென்மையான ஒரு பகுதி தான் உதடுகள். இந்த உதடுகள் தான் ஒருவரின் அழகை அதிகரித்து வெளிப்படுத்தும். ஆம், உதடுகளில் சிறு மாற்றங்கள் இருந்தாலும், அது முகத்தின் அழகையே மாற்றிவிடும். ஆனால் பலர் உதடுகளை சரியாக பராமரிக்காமல் இருக்கின்றனர். உதடுகள் பெண்களுக்கு மட்டும் அழகை கொடுப்பதில்லை, ஆண்களுக்கும் தான். எனவே உதடுகளை பராமரிப்பது என்பது முக்கியமான ஒன்று.

**காலநிலை மாற்றங்கள்**
காலநிலை மாற்றங்களால் உதடுகளில் வறட்சி ஏற்படும் என்பது அனைவருக்கும் தெரியும். ஏனெனில் காலநிலை மாற்றத்தின் போது, உதடுகளின் மீதுள்ள ஈரப்பசையானது வெளியேற்றப்பட்டு, வறட்சியை ஏற்படுத்துகிறது. அதுமட்டுமல்லாமல், காலநிலை மாறும் போது, அதிகப்படியாக வேலையின் காரணமாக வெளியே சுற்ற வேண்டியிருப்பதால், குறிப்பாக குளிர்காலம், கோடைகாலம் போன்றவற்றின் போது மேற்கொள்ளும் போது, உதடுகளில் வறட்சி ஏற்பட்டு, வெடிப்புக்கள் ஏற்படுகிறது. எனவே இக்காலங்களில் உதடுகளை தவறாமல் முறையாக மாய்ஸ்சுரைஸ் செய்ய வேண்டும்.

**உதடு பராமரிப்பு**
உதடு வறட்சியால் வெடிப்புக்கள் அதிகமானால், அப்போது லிப் பாம்களை பயன்படுத்தி உதடுகளைப் பராமரிக்க வேண்டும். குறிப்பாக உதடுகளுக்கு லிப் பாம்களை அனைத்து பருவ காலத்திலும் மறக்காமல் பயன்படுத்த வேண்டும்.

**நீர்மத்தை அதிகம் எடுத்துக் கொள்ளவும்**
உடலில் நீர்ச்சத்து குறைவாக இருந்தாலும், உதடுகளில் வறட்சி ஏற்படும். எனவே அப்போது தண்ணீரை அதிக அளவில் குடிக்க வேண்டும். இப்படி நீரை அதிகம் பருகி வந்தால், உடல் வறட்சி நீங்குவதுடன், உதடுகளில் வறட்சி ஏற்படாமல் இருக்கும்

**அதிகப்படியான அசிட்டிக்**
உடலில் அசிட்டிக் அளவுக்கு அதிகமாக இருந்தாலும், உதடுகளில் வறட்சி ஏற்படும். அப்போது உதடுகளின் வறட்சியைப் போக்கும் உணவுப் பொருட்களை அதிகம் உட்கொண்டு, அசிட்டிக்கின் அளவை குறைக்க வேண்டும். அப்படி பழங்கள் மற்றும் காய்கறிகளை உட்கொண்டு வந்தால், அசிட்டிக்கின் அளவு குறைந்து அல்கலைன் அளவானது அதிகரிக்க ஆரம்பிக்கும்.

**உதடுகளில் எச்சில் வைப்பது**
எப்போதும் உதடுகளில் எச்சல் வைத்துக் கொண்டே இருந்தால், உதடுகளில் உள்ள இயற்கையான எண்ணெயானது குறைந்து, வறட்சி அடைய ஆரம்பிக்கும். எனவே உதடுகளில் எப்போதும் எச்சில் வைப்பதை நிறுத்துங்கள். உதடுகளில் வறட்சி அடைவது குறையும்.

பொருட்களை தூக்கவோ, அல்லது வேலைகளை செய்யவோ நமக்கு உதவுவது உள்ளங்கைகள் மட்டுமே. இதனால் உள்ளங்கைகள் கடினமாக மாறிவிடும். ஆக உள்ளங்கைகள் அழகாக, மிருதுவாக அருமையான எளிய குறிப்பு இதோ உங்களுக்காக

கொஞ்சம் சர்க்கரையை எடுத்து, அதில் சில துளிகள் ஆலிவ் எண்ணெய் கலந்து நன்றாக உள்ளங்கைகளில் நன்றாக தேய்த்து கழுவ வேண்டும்.

இதேபோல் தினந் தோறும் செய்து வந்தால், உள்ளங்கைகளின் கடினத் தன்மை மறைந்து மிருதுவாக மாறும். மாறுவது மட்டுமல்ல உங்கள் உள்ளங்கைகளைக் காண்பவர் மனமுவந்து பாராட்டுவர்.

## உள்ளங்கைகள் அழகாக, மிருதுவாக அருமையான எளிய குறிப்பு!



என்னை விட்டு பிரிந்து சென்றது
நீ தானே தவிர
உன் காதல் இல்லை!!!
காலமெல்லாம் காதலியாக
உன் இதயத்தில் இருப்பேன்..
உனக்காக மட்டுமே துடிப்பேன்
என்று கூறிய உள்ளமொன்று..
இன்று கல்லறையில்
உறங்கி கொண்டிருக்கிறது
நீண்ட நாட்களாக!!!



## மிருதுவான பாதங்களை பெற இதோ சூப்பர் டிப்ஸ்..!!

பொதுவாக சில பெண்களுக்கு முகம், கைகள் வெள்ளையாக காணப்படும். ஆனால் கால்கள் மட்டும் கருப்பாக காணப்படுவது உண்டு. அதுமட்டுமின்றி சிலருக்கு கருமை படர்ந்த கணுக்கால் வெடிப்பு நிறைந்த பாதம், பழுப்பேறிய நகங்கள், செருப்பு அணிவதால் உண்டான கருமை என பாதங்கள் பலருக்கு பிரச்சனையாகவும் காணப்படும்.

இதற்காக பலரும் நேரத்தை செலவழித்து பியூட்டி பாலர்களுக்கு சென்று பெடிகியூர் செய்வதே வழக்கமாக வைத்திருப்பார்கள். இதனை தவிர்த்து எந்த செலவும் இல்லமால் வீட்டில் எளிய முறையில் பாதங்களை வெள்ளையாக்க முடியும். தற்போது அதில் சிலவற்றை பார்ப்போம்.

பாதம் உள்ளங்கால் வறண்டு இருந்தால் 4 சொட்டு கிளிசரின் 4 சொட்டு எலுமிச்சைச்சாறை கலந்து தூங்கச் செல்லும்போது நகம் விரல்கள் பாதம் முழுவதும் தடவி காய்ந்தவுடன் சாக்ஸ் அணிந்து உறங்கவும்.

பாலில் தோய்த்தெடுத்த பஞ்சு கொண்டு நகங்களில் தேய்த்து வந்தால் நகம் உடையாமலும் மினுமினுப்பாகவும் இருக்கும்.

குளிப்பதற்கு முன் கஸ்தூரி மஞ்சளுடன் வெண்ணெயைக் கலந்து நன்றாகத் தேய்த்து வந்தால் சொரசொரப்பான பாதமும் மிருதுவாகி விடும்.

வெதுவெதுப்பான நீர் நிறைந்த பெரிய பாத்திரத்தில் ஷாம்பூ உப்பு மற்றும் ஒரு எலுமிச்சம்பழத்தின் சாறை விட்டு அந்த தண்ணீரில் சில நிமிடங்கள் பாதங்களை அமிழ்த்தி வைத்து ப்யூமிக் கல்லால் தேய்க்க வேண்டும். பிறகு குளிர்ந்த நீரால் கழுவி நன்றாக துடைத்து விடவும்.

சிறிது கற்றாழை ஜெல்லுடன் கடலை மாவைக் கலந்து மிக்ஸியில் அரைத்து 2 நாட்களுக்கு ஒருமுறை உள்ளங்கால் பாதம் கணுக்கால் முழுவதும் தேய்த்துக் கழுவ காயத்தால் ஏற்பட்ட தழும்புகள் கருமை மறைந்து சருமம் இயல்பான நிறத்துக்கு மாறும்.

நான்கு துளி விளக்கெண்ணெயை உள்ளங்கையில் எடுத்துக்கொண்டு நன்றாக சூடு பறக்க தேய்த்து 2 பாதங்களிலும் தேய்த்து வர பாதம் மினுமினுப்பாக மாறும். மாதம் இருமுறை வெள்ளை எள்ளை அரைத்து பாதம் நகங்களில் பத்துபோல் போட்டு கழுவவும். இது நகத்தின் இடுக்குகளில் படிந்துள்ள மண் அழுக்குகளை அகற்றி நல்ல பளபளப்பை கொடுப்பதுடன் வெடிப்பு வராமலும் பாதுகாக்கும். காலணிகளையும் சரியான அளவில் போட வேண்டும். தரமானதாகவும் சௌகரியமானதாக வாங்கி அணியும்போது பாதம் கருத்துப் போகாமல் இயல்பாய் இருக்கும்.

தொகுப்பு :- சப்தஹி

# இத்தாலியை விடவும் இலங்கையில் மிக மோசமாக கொரோனா பரவும் அபாயம் -மாவை சேனாதிராஜா

கடந்தவார தொடர்ச்சி...

பாடசாலைகளை திறப்பதற்கு முன்னர் பல்கலைக்கழகங்களை திறப்பதற்கு முன்னர் தடுப்பு மருந்துகள் கொடுப்பதற்கு அனுமதிக்க வேண்டும். அவர்களுக்கு பொதுவாக இளம் சமூகமாக மாணவ சமூகமாக பல்கலைக்கழகங்களை நடத்தப் போகின்றவர்களை என்கின்ற அனைவரிற்கும் இரத்தப் பரிசோதனைகள் பரீட்சாத்தியமாக செய்யப்பட வேண்டும்.

அவ்வாறு செய்வதன் மூலம் அவர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தலாம். இதனால் மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படும். தற்பொழுது கொரோனா வைரஸ் இல்லை அது வராது என்ற நிலைமைகளை தடுப்பூசி கொடுப்பது இரத்த பரிசோதனைகளை நடத்துவது பாதுகாப்பான வழிமுறைகளை அவர்களை பின்பற்றச்செய்வது போன்ற விடயங்களை கல்விச் சமூகத்திற்கும் மாணவர்கள் மற்றும் சிறுபிள்ளைகளுக்கு தடுப்பு மருந்துகளை கொடுப்பதன் மூலம் அவர்களையும் நாங்கள் பாதுகாத்து பாடசாலைகளை திறக்க வேண்டும் என்ற கருத்தை நான் அமைச்சரவை இடத்திலே கூறியிருந்தேன். அவர்கள் அதிலே இறங்கியிருக்கிறார்கள். நாங்கள் அதை ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுப்போம் எங்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்ளுகின்றோம் என்றும் கூறியிருக்கின்றார்கள். அவர்களிடத்தில் பேசியபொழுது எனக்கு ஆறுதலாக இருந்தது அவர்களும் இந்த விடயத்தினை ஏற்றுக்கொள்ளுகின்றார் என்று.

ஆகவே இந்த விடயத்தில் வடக்குகிழக்கு பிரதேசங்களிலும் சரி இலங்கை முழுவதும் இந்த கொரோனா வைரஸ் எப்பொழுது வரும், யாருக்கு நோய் இருக்கிறது, அவர்களுடைய நோய் தீர்ந்தாலும் மீண்டும் வருகின்றது என்பதை சீனாவிலே கூறியிருக்கின்றார்கள். ஆகவே இந்த காலத்தில் தாங்கள் தன்னிச்சையாக தேர்தலிலே வெற்றிபெற வேண்டும் என்பதற்கான நோக்கத்தை அல்லதுஅரசியல் நோக்கங்களை எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் கூட அதை தூக்கிவைத்துவிட்டு ஒற்றுமையாக ஒரு அரசியலமைப்பு அந்த நெருக்கடிகளுக்கு தீர்வு காணுவதற்கும் இந்த கொரோனா வைரஸை மையமாக கொண்டு நாங்கள் அதை மாற்றியமைப்பதற்கும்



தீர்வுகாண்பதற்கும் மீண்டும் மீண்டும் வரக்கூடிய இந்த நோய் அடையாளம் காண முடியாத அளவிற்கு வரும் என்றும் கூறுகின்றார்கள். இதற்கு தீர்வு காண்பதற்கு அனைவரும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து மக்களை பாதுகாப்பதற்கு முக்கியத்துவமளித்து செயற்பட வேண்டும் என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**இரணியன்**

# அதிகாரத் தொனியில் உழைப்பாளிகளை அடக்க முனைவதை ஏற்றுக் கொள்ள முடியாது - ரிசாட்

4ஆம் பக்க தொடர்ச்சி...

மே 3-ம் நாள் வேலை நிறுத்தம் செய்த மெக்கார்மிக் ரீப்பர் வொர்க்ஸ் தொழிலாளர்களின் கூட்டத்தில் நிகழ்ந்த பொலிஸின் காட்டு மிராண்டித்தனமான அடக்கு முறையை எதிர்த்து மே 4-ஆம் நாள் வைக்கோல் சந்தை சதுக்கம் என்றழைக்கப்படும் இடத்தில் ஆர்ப்பாட்டம் நடந்தது. அந்த கூட்டம் அமைதியாக நடந்தது. பொலிஸ் மீண்டும் கூடியிருந்த தொழிலாளர் மீது தாக்குதலைத் தொடுக்க ஆரம்பிக்கும் போது கூட்டம் தள்ளிவைக்கப்பட இருந்தது. கூட்டத்தில் எறியப்பட்ட ஒரு குண்டு இராணுவ அதிகாரி ஒருவனைக் கொன்றது. இதன் விளைவாக எழுந்த ஒரு மோதலில் ஏழு பொலிஸ்காரர்களும் நான்கு தொழிலாளர்களும் கொல்லப்பட்டனர். வைக்கோல் சந்தை சதுக்கத்தில் ஏற்பட்ட இரத்த ஆறும், போர்க்குணமிக்க சிக்காகோ தொழிலாளர் தலைவர்களை சிறைக்கும், தூக்கு மேடைக்கும் அனுப்பியதும் தான் சிக்காகோ நகர முதலாளிகளின் பதிலாயிருந்தன.

உலகெங்கிலுமுள்ள பாட்டாளி மக்களுக்கு மே தினம் ஒரு ஈர்க்கும் முனையாக மாறியது. மே தின ஆர்ப்பாட்டங்களின் போது 8 மணி நேர வேலைநாள் என்ற பிரதான கோரிக்கையோடு மற்ற முக்கியமான கோரிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்துமாறும் தொழிலாளர்கள் அழைக்கப்பட்டார்கள். உலகத்தொழிலாளர் ஒற்றுமை எல்லோருக்கும் ஒரே மாதிரியான ஓட்டுரிமை ஏகாதிபத்திய போர் மற்றும் காலணி ஆதிக்க எதிர்ப்பு தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமை அரசியல் மற்றும் பொருளாதார ஸ்தாபனம் கட்டும் உரிமை போன்றவை அந்தக் கோரிக்கைகளில் சிலவாகும்.



இன்றோ அரசுப்பணிகளில் சேருவோரும், மென்பொருள் நிறுவனத்தில் இருப்போரும் தங்களை மாத சம்பளம் பெறுபவர் என்பதையே மறந்து 12 நேரம் உழைக்கிறார்கள். தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. அதன் பலனை 35 வயதில் திறனற்றவர் என்ற முத்திரையை முகத்தில் குத்தி தங்களை திடீரென வெளியே தள்ளும் போது அனுபவிக்கிறார்கள். டிசிஎஸ் சம்பவத்திற்கு பின்னர் தொழிற்சங்க அருமை சிலருக்கு புரிந்து வருகிறது. அனைவருக்கும் வரவேண்டும். அணி சேர்ந்து போராடி புது விதிகள் செய்ய வேண்டும். தகவல் தொழில் நுட்பத்துறையில் ஆயிரம் கோடிகள் கணக்கில் பணம் பண்ணும் முதலாளிகளுக்கு சங்கம் நாஸ்காம் இருக்கையில் பணிபுரிபவர்களுக்கு ஏன் இல்லை?

**வருந்தி அழுவது போல கூட நடித்து விடலாம்!!**
**ஆனால் உழைத்து வியர்வை வருவது போல**
**நடிக்க முடியாது!!**

# கொரோனா வைரஸ் தொற்றாளர்களை தனிமைபடுத்த நட்த்திர விடுதிகளை பயன்படுத்துங்கள் – வைத்திய கலா நிதி சி.சிவமோகன்

இரத்தத்தில் வரும் ஒட்சிசனையும் இரத்தத்தில் வரும் புரதங்களையும் தனக்குத் தேவையான நேரங்களில் கலங்கள் திறந்து அவற்றை உள்ளே அனுமதிக்கும். தேவையற்ற புரதங்களை உள்ளே அனுமதிக்காது. ஆனால் கொரோனாவில் என்ன நடந்தது என்றால் ஏனைய பகுதிகளில் இருக்கும் கூறுகள் போல் இருக்கும் அந்த இடத்தில் கலத்திற்கு தேவையான புரதங்கள் இருக்கிறது. எனவே இந்த வைரஸ் தன்னை ஏமாற்றி அந்த கலத்தினுள் புகுந்து விடும். புகுந்து இந்த கலத்தை அழித்துவிடும் இது தான் இந்த செயற்பாட்டிலுள்ள விடயம். இது சரியாக உறுதிப்படுத்தப்படவில்லை. ஆய்வு கூட ரீதியில் உருவாக்கப்பட்ட ஒரு கிருமியா? ஆல்லது மிருகங்களில் இருந்து மனிதனுக்கு தொற்றை ஏற்படுத்தும் பொழுது அது தன்னுடைய இயல்பை மாற்றிக்கொண்டதால் வந்த கிருமியா, அல்லது மனிதனை தொற்றி மனிதனிலே மாற்றத்தை கொண்டு வந்த கிருமியா என்பது இன்னும் சரியாக கண்டுபிடிக்கப்படவில்லை. இதை பலவிதமாக கூறுகின்றார்கள். இதைக் கண்டுபிடிக்கும் பொழுது இதற்கான முடிவுகள் எதிர்காலத்தில் உங்களுக்கு கிடைக்குமென்று நான் நினைக்கின்றேன். தற்பொழுது மருத்துவ தேவையென்று சொன்னால் கூட இன்று அரசாங்கம் தேவையானளவு மாஸ்க், வென்டியேட்டர்ஸ் இவ்வாறான தனிமைப்படுத்தல் வசதிகள் செய்து வைத்துள்ளதா இல்லையா என்பது பற்றிய சரியான பதில் கிடைக்கவில்லை. ஏனென்று சொன்னால் இந்த மாஸ்க் மற்றும் வென்டிலேட்டர்ஸ் என்பது உலகளவில் தட்டுப்பாடாக உள்ளது. எனவே பெரியளவில் இதை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்தால் முடியாமல் இருக்கின்றதோ தெரியவில்லை. இது உலகளாவிய தொற்று ஒன்றாகும். எங்களுக்கு மட்டும் வந்திருந்தால் உடனடியாக நிவர்த்தி செய்ய முடிந்திருக்கும். ஆனால்இது உலகளாவிய ரீதியில் உள்ளமையால் இவ்வாறான குறைபாடுகள் எங்களுக்கு இருக்கப்போகிறது. அவசர சிகிச்சைகளை உறுதிப்படுத்த முடியாத நிலை இருக்கலாம். எல்லாவற்றையும் மூடி மறைத்து அனைத்தும் எம்மிடம் இருக்கிறது என்று நான் சொல்லவரவில்லை. இன்று எமது வைத்திய தேவைகள் பல உள்ளன. நான் ஒரு ஊடக அறிவிப்பை பார்த்தேன். மட்டக்களப்பிலுள்ள ஒரு வைத்தியர் கூறுகின்றார் நாளைக்கு இந்த மாஸ்க் இல்லையென்றால் எவ்வாறு சேவை செய்யப்போகின்றோம் என்றளவிற்கு. எனவே தரமான மாஸ்க் இன்று எங்களிடமில்லை. எனவே இப்படியான சரியான முறையில் இதனை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாங்கள் குற்றம் சொல்லவில்லை. அரசாங்கம்உடனடியாக இந்த மாவட்ட மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்ட சேவைகள் சரியான முறையில் இயங்குவதற்கும் எடுக்கப்படும் தீர்மானங்கள் அனைத்தும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு அதுவொரு வங்கியில் நடைமுறையில் இருந்தாலும் கோப்பிரட்டி சொசைட்டியில் நடைமுறையில் இருந்தாலும் அல்லது இன்னுமொரு திணைக்களம் சம்பந்தப்பட்டதோ அல்லது வைத்தியசாலை சம்பந்தப்பட்ட நடைமுறை இருந்தாலும் அல்லது சமூர்த்தி உத்தியோகஸ்தர் சம்பந்தப்பட்ட நடைமுறையாக இருந்தாலும் எப்பொழுது நாங்கள் வாய்மூலம் அறிக்கை விடுகின்றோமோ அடுத்த வினாடி அதற்கான அறிவித்தல் எழுத்துமூலம் ஜனாதிபதி செயலகத்திலிருந்து உடனடியாக பல மட்டங்களுக்கும் அனுப்பப்பட வேண்டும். வெறுமனே அறிக்கைகளை மட்டும் விட்டுக்கொண்டு எதுவுமே இந்த மாவட்டத்தல் நடத்தப்படவில்லை என்ற நிலையை உருவாக்கக் கூடாது. இது என்னுடைய கருத்து.

**கேள்வி :** அமெரிக்கா கொரோனா வைரஸிற்கான இன்ஜக்சனை கண்டு பிடித்து விட்டது, கியூபா கண்டு பிடித்து விட்டது, இஸ்ரேல் கண்டுபிடித்துவிட்டது என்றெல்லாம் முக நூலிலும் ஏனைய செய்திகளிலும் வந்துகொண்டிருக்கின்றது. இவற்றை இந்த நாடுகளுக்கு கண்டு பிடித்துவிட்டன என்றால் கொரோனா வைரஸினால் தாக்கப்பட்டவர்களின் மரணத்தை தடுக்கலாம் தானே? ஆவ்வாறான நிலைப்பாடுகள் இதுவரை இலங்கைக்கு கொண்டுவரப்படவில்லையா?

**பதில் :** முதலில் தடுப்பு மருந்து கண்டு பிடிக்கப்படும் பின்னர் அந்த ஊசிகள் மிருகங்களில் ஏற்றி பரிசீலணை செய்யப்படும். பரிசீலனை செய்த பின் அதை நோயுற்ற மனிதர்கள் சிலரில் பரிசீலனை செய்யப்படும். இவையனைத்திலும் இது பாதுகாப்பானது என்று உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரம் தான் உற்பத்தி ஆரம்பிக்கப்படும். அதன் பின்னர் உற்பத்தி செய்யப்படும் மருந்து தான் பெரியளவில் உற்பத்தி செய்யப்பட்டு நாடுகளுக்கு வழங்கப்படும். எனவே இதுவொரு கால இடைவெளியுடன் சேர்ந்த விடயம். அவசரஅவசரமாக ஒரு மருந்தை கொண்டு வந்து மனிதர்களுக்கு வழங்க முடியாது. எனவே இதற்கொரு காலமுண்டு. இந்த காலம் வரும் வரை எங்களை நாங்கள் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். எங்களை நாங்களே காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்றால் தனிநபர் சுகாதார முறைகளையும் தனி சமூதாய சுகாதார நடைமுறைகளையும் சாதாரண தடிமன் காய்ச்சல் வந்தால் கூட பரவாயில்லை ஆனால் சாதாரண காய்ச்சல் போல் தான் இந்த கொவிட் - 19 இம் இருக்கப்போகின்றது. எனவே நாங்களே எங்களை தனிமைப்படுத்தி 14 நாட்கள் இருப்பதில் எந்தவித நட்டமுமில்லை.

**கேள்வி :** உலகளாவிய ரீதியல் மருத்துவத்தை ஊக்குவிப்பதற்காக, மருத்துவ இன்ஜக்சன்களை விற்பனை செய்வதற்கான இவ்வாறானதொரு சந்தைப்படுத்துவதற்காக தொற்றை உருவாக்கியிருக்கலாம் என்று ஏன் பார்க்கக்கூடாது?

**பதில் :** நான் நினைக்கவில்லை எந்தளவு தூரத்திற்கு ஒரு மனித விரோத செயலை ஒருநாடோ அல்லது நிறுவனமோ செயற்படுத்துவதற்கான சந்தர்ப்பமும் இதுவரையும் மிகவும் குறைவாகத் தான் உள்ளது. கோவிட் - 19 இன் மேற்பரப்பிலுள்ள அந்த புரத துணிக்கை அது செயற்படும் தன்மைகளை பார்க்கும் பொழுது நீங்கள் சொன்னது போன்று உயரிய ஆயுதத்திற்காக இது தயாரிக்கப்பட்டிருந்தால் தற்பொழுது நூறு பேரிற்கு தொற்று ஏற்பட்டால் 3 பேரிற்கு மட்டும் தான் பாதிப்பு ஏற்படும். ஆனால் விஞ்ஞான ரீதியில் கண்டுபிடித்து இதை செயற்படுத்த வேண்டுமென்று ஒரு நாடு நினைத்து ஒரு உயரிய ஆயுதமாக இதை உற்பத்தி செய்யுமாக இருந்தால் 100 பேரிற்கு தொற்று ஏற்பட்டு 50 பேர்



60 பேர் இறக்கும் அளவுக்கு கூட அதை அவர்களால் உருவாக்க முடியும். எனவே இங்கு இது இயற்கையாக உருவாக்கப்பட்ட ஒன்றாகத்தான் பார்க்கப்படுகின்றது.

**கேள்வி :** சீனாவிலிருந்து பிளாஸ்டிக் குண்டுகள் இலங்கையில் தாக்கப்பட்ட பொழுது உடல்கள் கருகி தான் வன்னி பிரதேசத்திலே மக்கள் இறந்துகிடந்தார்கள். அப்படியாக இருந்தால் ஒரு கெமிக்கலை உருவாக்கி ஒரு நாடுகளை தாக்குவதற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஒன்று தான் லீக்காகி வெளியில் வந்தது என்று ஒரு கருத்து நிலவுகிறது அதை ஏற்றுக்கொள்கின்றீர்களா?

**பதில் :** இரசாயண ஆயுதங்கள் வன்னியில் பயன்படுத்தப்பட்டது என்பது தடை செய்யப்பட்ட கொத்துக்குண்டுகள் பாவிக்கப்பட்டது என்பது வெளிப்படையாக வெளிவந்த ஒரு விடயம். ஒழிப்பதற்கு அங்கு எதுவுமே இல்லை, ஆதாரங்கள் பல இருந்தன. ஆனால் சர்வதேச விசாரணைகள் எதுவுமே நடத்தப்படவில்லை அவற்றை உறுதிப்படுத்துவதற்கு. அதை தான் கோரிக்கொண்டு நின்றார்கள் தமிழ் சமூதாயம், தமிழர்கள், நாங்கள் கோரிக்கொண்டிருந்தோம். இவற்றை உறுதி செய்யக்கூடிய சர்வதேச விசாரணைகள் நடத்துங்கள் என்று. இன்று வரை இலங்கையில் அந்த சர்வதேச விசாரணைகள் நடத்தவில்லை. நாங்கள் எதை வைத்து இதை நம்பப் போகின்றோம் அனைத்து ஆதாரங்களும் அழிக்கப்பட்டுவிட்டன. ஆதாரங்கள் சகலதும் இன்று மூடி மறைக்கப்பட்டுவிட்டன.

**கேள்வி :** கரையோர பாதுகாப்பு, எல்லைப் பாதுகாப்பு தொடர்பாக ஆரம்பத்திலே நீங்கள் வெளியிட்டிருந்ததை, அரசாங்கம் அதை நடைமுறைக்கு கொண்டு வந்தது வைத்தியர் என்ற அடிப்படையிலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் இது பாராட்டத்தக்க விடயம். ஆனாலும் இத்தாலியிலிருந்து படகின் மூலம் இங்கு வந்தவர்களில் 85 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இலங்கைவாழ் மக்களாக இருக்கிறார்கள். நான் நினைக்கின்றேன் 6000 7000 ஐயும் தாண்டிவிட்டது இறப்பு. இலங்கையர்கள் எத்தனைபேர் இறந்தார்கள் என்றும் கூட இதுவரையிலும் தெரியாது. கரையோர பாதுகாப்பு பற்றி உங்களுடைய கருத்து என்ன?

**பதில் :** கரையோர பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். எமது மக்கள் கடலினூடாக வேறு நாடுகளுக்கு பயணித்தவர்கள் என்றும் உங்களுக்கு தெரியும். அது தொடர்ந்து கொண்டும் இருந்தது. அங்கு ஒரு அச்சுறுத்தல் வரும் போது இத்தாலியிலிருந்து மீண்டும் மக்கள் எமது கடலையும் தாண்டி இலங்கையில் கால் பதிப்பதற்கான சந்தர்ப்பம் இருந்தது.

எனவே இந்த விடயத்தில் கடற்படையினர் கரையோர பாதுகாப்பை செய்வதற்காக இருக்கின்றார்கள். இன்று எமது பிரதேசத்தில் அதிகப்படியான தனிமைப்படுத்தல் நிலையங்கள் ஏன் இருக்கின்றது என்றால் எமது பிரதேசத்தில் தான் இராணுவத்தின் முகாம்கள் அதிகபடியாக இருக்கின்றது. ஆகவே தான் எங்களின் பிரதேசத்தில் அதிகபடியான தனிமைப்படுத்தல் முகாம்களை நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றது. எனவே எமது பிரதேசத்தில் எங்கு பார்த்தாலும் இராணுவத்தினரும் கடற்படையினரும் சுற்றி வளைத்துக்கொண்டிருக்கின்றார்கள். எனவே அவர்கள் கடலோர காதுகாப்புகளை பார்க்கலாம் தானே.

**கேள்வி :** கொரோனா வைரஸ் தொடர்பான இறுதி நடவடிக்கையாக அனைத்து அரசியல்வாதிகளும் சமூக செயற்பாட்டாளர்களும் இந்த களத்தில் தற்பொழுது இறங்கியிருக்கின்றார்கள். சற்று ஒரு வித்தியாசமாக அரசியல்வாதிகள் இதிலே ஒரு தேர்தலும் வந்திருப்பதால் தேர்தலை பயன்படுத்துவதற்காக தமது சகாக்களை களமிறக்கிவிட்டிருக்கின்றார்கள். இதைவிட முகப்புத்தகத்திலே இணையதளங்களிலே படங்களை எடுத்து கூட போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுவொரு ஆராக்கியமானதாக அமையுமா என்பது தான் என்னுடைய கேள்வி?

**புதில் :** நிச்சயமாக இல்லை. இங்கு ஒரு தேசிய அனர்த்தத்திற்கு, நோய்க்கு எமது நாடு உட்பட்டிருக்கின்றது என்றால் அனைவரும் ஒன்று சேர்ந்து இதை இல்லாமல் செய்வதற்கான நடைமுறைகளை நாங்கள் எடுக்க வேண்டும். இதை விட்டு அரசியல் ரீதியில் இதில் அனுதாபம் தேட நினைக்கும் அனைவரும் இறந்த வீட்டில் கொள்ளி பிடுங்குபவர்களாகத் தான் இருப்பார்கள்.

இரணியன்




## மேலும் ஆறு புதிய அறிகுறிகள்!

இன்று கொரோனாவின் மையமாகியிருக்கிறது அமெரிக்கா. எனவே கோவிட் - 19 வைரஸ் தாக்குதல் இருப்பவர்களுக்கு, வரும் ஆறு புதிய அறிகுறிகளை அண்மையில் அந்நாட்டின் நோய்த் தடுப்பு மையம் அறிவித்து உள்ளது.கடந்த சில மாதங்களில், பிற நாடுகளில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு ஆளானோரிடம் பரவலாக் காணப்பட்ட அறிகுறிகளின் அடிப்படையில், இந்த புதிய பட்டியல் வெளியிடப்பட்டு உள்ளது.

ஏற்கனவே, காய்ச்சல், சளி மற்றும் இருமல், மூச்சு விடுவதில் சிரமம் ஆகிய மூன்றையும் முக்கிய அறிகுறிகளாக அமெரிக்கா அறிவித்திருந்தது.தற்போது மேலும் ஆறு அறிகுறிகள் குறித்து கவனமாக இருக்கும்படி மக்களைக் கோரியுள்ளது.

தலைவலி (குறிப்பாக நெற்றி அல்லது கண்களுக்கு அருகே). வாசனை அறியும் உணர்வு இல்லாமல் போதல். சிவந்த கண்கள், தொண்டைச் சளி. உடல் சில்லிடுதல். தசை வலி. இந்த அறிகுறிகள் உள்ள அமெரிக்கர்களை, உடனே மருத்துவ சோதனை செய்துகொள்ள முன்வருமாறு அந்நாட்டு நோய்த்தடுப்பு மையம் அறிவித்து உள்ளது.




## புதிய மைல்கல்லை எட்டியது TikTok

சீன நிறுவனமான ByteDance உருவாக்கிய வீடியோ டப்பிங் அப்பிளிக்கேஷனான TikTok உலக அளவில் மிகவும் பிரபலமடைந்துள்ளமை தெரிந்ததே.

இந்நிலையில் தற்போது சுமார் இரண்டு பில்லியன் தரவிறக்கத்தினை குறித்த அப்பிளிக்கேஷன் எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூகுளின் பிளே ஸ்டோர் மற்றும் ஆப்பிளின் ஆப்ஸ் ஸ்டோர் இரண்டிலுமாக இந்த எண்ணிக்கையை எட்டியுள்ளது.




1.5 பில்லியன் எனும் மைல்கல்லை கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் எட்டியிருந்த நிலையிலேயே இந்த வருடத்தின் முதலாவது காலாண்டு நிறைவில் 2 பில்லியன் எனும் அடுத்த மைல்கல்லை அடைந்துள்ளது.

இதுவரை எந்தவொரு அப்பிளிக்கேஷனும் ஒரு காலாண்டில் 315 மில்லியன் தரவிறக்கங்களை தாண்டியதில்லை.

ஆனால் கொரோனா வைரஸ் லாக்டவுன் காரணமாக இச் சாதனையை TikTok நிலைநாட்டியுள்ளது.

## நோயாளிகளை சோதிக்கும் 'ரோபோ!'

மருத்துவ சேவை செய்வோருக்கு கொரோனா தொற்றாமலிருக்க, 'ரோபோ'க்களை பயன்படுத்தலாம் என, பல நாடுகளில் சோதனை முயற்சிகள் நடக்கின்றன.ரோபோ உலகில் புரட்சிகளை நிகழ்த்தி வரும், 'பாஸ்டன் டைனமிக்ஸ்' நிறுவனம் அண்மையில் தன், 'ஸ்பாட்' என்ற நான்கு கால் ரோபோக்களை, அமெரிக்காவின் பாஸ்டன் நகர மருத்துவமனை ஒன்றிற்குக் கொடுத்துள்ளது.

ஒரு விலங்கின் தோற்ற முள்ள ஸ்பாட் ரோபோவின் முதுகில், இரண்டு ஐபேட் கணினி, கேமரா, வாக்கி டாக்கி கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.தொலைவிலிருந்தே இயக்கக் கூடிய ஸ்பாட் ரோபோவை, நோயாளிகளிடம் அனுப்பி, முதற்கட்ட சோதனைகளை, பாஸ்டன் மருத்துவமனை செவிலியர் மேற்கொள்ளத் துவங்கியுள்ளனர்.

விரைவில் வெப்ப உணரி கேமராக்களை பொருத்தி, நோயாளிகளின் உடல் வெப்பம், மூச்சு விடும் விகிதம், ரத்த நாளங்களின் நிலை, ரத்தத்தில் ஆக்சிஜன் விகிதம் போன்ற வசதிகளையும் சேர்க்கவுள்ளது பாஸ்டன் டைனமிக்ஸ்.

தொலைவிலிருந்து இயக்கப்படும், சக்கரங்களைக் கொண்ட எளிமையான ரோபோக்களையும் இது போல மருத்துவமனைகள் பயன்படுத்தலாம் என்பதால், தங்கள் பரிசோதனை முறைகள், கற்றுக்கொண்ட பாடங்களை பொதுவெளியில் பாஸ்டன் டைனமிக்ஸ் பகிர்ந்து கொள்கிறது.



## வீட்டிலிருந்து வேலை செய்தல் என்பதால் உருவாகியுள்ள மிகப்பெரிய பிரச்சினை

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக அனேகமான நிறுவனங்கள் தமது பணியாளர்களை வீட்டிலிருந்து பணியாற்றுமாறு பணித்துள்ளன.இது இணைய உலகில் மிகப்பெரிய பிரச்சினைக்கு வழிவகுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கூகுள், மைக்ரோசொப்ட் உட்பட சைபர் பாதுகாப்பு நிறுவனங்கள் மற்றும் FBI என்பன இந்த தகவலை தெரிவித்துள்ளன.

வீட்டிலிருந்து பணியாற்றுதலானது சைபர் கிரிமினல்களுக்கு இலகுவான புதிய பாதையை வகுத்து தந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. Zoom அப்பிளிக்கேஷனை நாள் ஒன்றிற்கு 10 மில்லியன் தொடக்கம் 200 மில்லியன் வரையானவர்கள் பயன்படுத்துகின்றமையையும், இந்த அப்பிளிக்கேஷனில் உள்ள குறைபாடுகளையும் உதாரணமாக குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை தொலை அணுகள் பிளார்ட்போர்மில் ஒரு வாரத்தில் சுமார் 18 மில்லியன் மல்வேர்களை கூகுள் நிறுவனம் தடை செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

**இரண்டாம் உலகப்போரின் தாக்கத்தை, அப்போதைய தலைமுறையினரால் எப்படி மறக்க முடியவில்லையோ, அதே போல, 'முதலாம் உலகத் தொற்று நோய்' என்று அறியப் படும் கோவிட் - 19 தொற்று ஏற்படுத்திய வலிகள், சோகங்கள், இழப்புகளை இன்றைய தலைமுறையினரால் மறக்க முடியாது.**

பில் கேட்ஸ்
நிறுவனர்,மைக்ரோசாப்ட்



# விளையாட்டு செய்திகள்




## 'த ஹண்ட்ரெட் கிரிக்கெட் தொடர்' ஒத்திவைப்பு

கிரிக்கெட் உலகில் புதிய அத்தியாயமான 'த ஹண்ட்ரெட் கிரிக்கெட் தொடர்' ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

வெளிநாட்டு வீரர்களின் பங்களிப்பில் உள்ள குழப்பங்கள், குறைய வாய்ப்புள்ள பார்வையாளர்களின் வருகை போன்ற காரணங்களால் இத்தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கிரிக்கெட் சபை விளக்கம் அளித்துள்ளது.

அத்தோடு, இந்த வருடம் தொடரை நடத்தினால் எதிர்பார்த்த வரவேற்பும் வருமானமும் கிடைக்காது என இங்கிலாந்து கிரிக்கெட் சபை எண்ணுகின்றது.

கொரோனா வைரஸ் (கொவிட்-19) அச்சுறுத்தல் காரணமாக, எதிர்வரும் ஜூலை 1ஆம் வரை தொழில்முறை கிரிக்கெட் போட்டிகளுக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

'த ஹண்ட்ரெட் கிரிக்கெட் தொடர்' 100 பந்துகளை கொண்ட தொடர் ஆகும்.

ஆண்கள் மற்றும் பெண்கள் என இருதரப்பினருக்கும் நடத்த திட்டமிடப்பட்ட இந்த தொடரில், வழக்கமான 6 பந்துகள் கொண்ட 15 ஓவர்களும் 10 பந்துகள் கொண்ட ஒரு ஓவரும் வீசப்படும். இத்தொடரில் தலா 8 அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

இத்தொடர், எதிர்வரும் ஜூலை 17ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 15ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## கெய்லின் குற்றச்சாட்டுகளைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளேன்

ஜமைக்கா தலாவாஸ் அணியிலிருந்து நீக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக, கிறிஸ் கெய்ல்தன்மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளதாக அணியின் உதவி பயிற்சியாளரும் முன்னாள் வீரருமான ராம்நரேஷ் சர்வான் தெரிவித்துள்ளார்.

கரீபியன் பிரீமியர் லீக் ரி-20 தொடரின் நடப்பு சீசனில் ஜமைக்கா தலாவாஸ் அணியிலிருந்துஇ மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான கிறிஸ் கெய்ல், நீக்கப்பட்டார்.

இதற்கு ராம்நரேஷ் சர்வான் தான் காரணம் என கிறிஸ் கெய்ல் கடுமையாக சாடினார். இந்தநிலையில் கெய்லின் குற்றச்சாட்டுகளை சர்வான் மறுத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில்,

'2020ஆம் ஆண்டு கரீபியன் பிரீமியர் லீக் ரி-20 தொடருக்காக, கிறிஸ் கெயிலை ஜமைக்கா அணி நீக்கியதில் என் பங்கு எதுவுமில்லை. அந்த காணொளியில் தவறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பலருடைய நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தியுள்ளார்.

என்னைத்தான் அதிகம் குறி வைத்துள்ளார். கெய்லின் குற்றச்சாட்டுகளுக்கு மதிப்பளித்து நான் பதில் அளிப்பதாக எண்ண வேண்டாம். ஆனால் அவர் களங்கம் ஏற்படுத்தியுள்ள பலருடைய வாழ்க்கை மற்றும் குணாதிசயங்களைக் காப்பாற்றவே இந்த விளக்கத்தை அளிக்கிறேன்.

என் கிரிக்கெட் வாழ்க்கையின் தொடக்கம் முதல், கெய்லுடன் விளையாடி வருகிறேன். அபரிதமான திறமை கொண்டவராக அவரை மதிக்கிறேன். முக்கியமாக என் நண்பரும் கூட. எனவே அவருடைய குற்றச்சாட்டுகளைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளேன்' என கூறினார். கெய்லின் குற்றச்சாட்டுகளை ஜமைக்கா அணியும் மறுத்துள்ளது. அணி உரிமையாளர்களும் நிர்வாகமும் எடுத்த முடிவின் படி கெய்ல் நீக்கப்பட்டுள்ளார்.



## 2023ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வெல்ல வேண்டும்



2023ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பதே தனது ஆசை என நியூஸிலாந்துகிரிக்கெட்அணியின்மூத்ததுடுப்பாட்ட வீரரான ரோஸ் டெய்லர் தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்து கிரிக்கெட் சபையால் ஆண்டுதோறும் வழங்கப்படும் சிறந்த வீரர்களுக்கான விருதில், சர் ரிச்சர்ட் ஹாட்லீ பதக்கத்தை மூன்றாவது முறையாக வென்ற டெய்லர், தனது கிரிக்கெட் எதிர்காலம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'ஏற்றம், இறக்கம் நிறைந்தது என்றாலும் 2019-20ஆம் ஆண்டு சீசன் எனக்கு வியப்புக்குரியதாகவே அமைந்திருக்கிறது. உலகக்கிண்ண இறுதிபோட்டியில் விளையாடினேன். அவுஸ்ரேலியாவில் 'பொக்சிங் டே' டெஸ்டில் பங்கேற்றது பெருமைமிக்க தருணம். அப்போது அங்கு நியூஸிலாந்து இரசிகர்கள் அளித்த ஆதரவை ஒரு போதும் மறக்க முடியாது. தொடர்ந்து நிலையான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்துவது மகிழ்ச்சி அளிக்கிறது.

இப்போதைக்கு ஓய்வு பெறும் எண்ணம் இல்லை. 2023ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடரை வெல்ல வேண்டும் என்பதே எனது ஆசை.

உத்வேகமும், மனரீதியாக தொடர்ந்து வலுவாக இருக்கும் போது 2023ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடரில் என்னால் விளையாட முடியும்.

அதன் பிறகு வயது வெறும் இலக்கம் தான். 2023ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடர் வரை தொடர்ந்து விளையாட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இன்னும் எனது துடுப்பாட்டத்தில் முன்னேற்றம் காண விரும்புகிறேன்' என கூறினார்.

36 வயதான டெய்லர் இதுவரை, 101 டெஸ்ட், 232 ஒருநாள் மற்றும் 100 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக செய்திகள்

## கொரோனா வைரஸ் பிரேஸிலின் ஏழைகளை அழிக்கிறது!

கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றால் ஏழைகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என பிரேஸில் அஞ்சுகின்றது.



இதற்கு பிரேஸிலில் இறுக்கம் நிரம்பிய சுற்றுப்புறங்களில் அதிகமான மக்கள் தொகை இருப்பதே முக்கிய காரணம் என கூறப்படுகின்றது.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பிரேஸிலில், கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றால் கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டும் 509பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 6,729பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 92 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 6,400இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

## எத்தியோப்பியாவிற்கு 411 மில்லியன் டொலர்கள் அவசரகால கடன் உதவி!

பொருளாதார வளர்ச்சியிலும், மருத்துவ வசதியிலும் மிகவும் பின் தங்கியுள்ள ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான எத்தியோப்பியாவிற்கு, 411 மில்லியன் டொலர்கள் அவசரகால கடன் உதவி வழங்க, சர்வதேச நிதியம் அனுமதி அளித்துள்ளது.

மேலும், எதிர்வரும் ஒக்டோபர் 13ஆம் திகதி வரை சுமார் 12 மில்லியன் டொலர் நிதிக்கு, கடன் சேவை கொடுப்பனவுகளை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற எத்தியோப்பியாவின் கோரிக்கையையும் அங்கீகரிப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட வைரஸ் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக எத்தியோப்பியா, இந்த தொகையினை செலவிடவுள்ளது.

கிழக்கு ஆபிரிக்க நாடான எத்தியோப்பியாவையும் விட்டுவைக்காத கொரோனா வைரஸ் தொற்றுக்கு, இதுவரை 131 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 3பேர் உயிரிழந்துள்ளனர். 59பேர் குணமடைந்துள்ளனர்.

## ஊரடங்கு கட்டுப்பாடுகளை மீறுவோர் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படுவர் என எச்சரிக்கை

சென்னையில் ஊரடங்கு கட்டுப்பாடுகளை மீறுவோருக்கு அபராதம் விதிக்கப்படுவதுடன், 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படுவர் என மாநகராட்சி நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை மாநகராட்சி ஆணையர் பிரகாஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சென்னையில் சில தினங்களாக கொரோனா பாதிப்பு அதிகரித்து வருவதால், வைரஸை கட்டுப்படுத்தும் பணியில் மாநகராட்சி தீவிரம் காட்டி வருவதாக தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் அதிகம் கூடும் பொது இடங்கள், கடைகளில் சமூக இடைவெளி கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் எனவும், அவ்வப்போது கிருமி நாசினி தெளிக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் ஊரடங்கு நேரத்தில் இயங்கும் அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் கட்டாயம் கிருமி நாசினி பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தியுள்ள மாநகராட்சி ஆணையர் பிரகாஷ், கட்டுப்பாடுகளை மீறி இயங்கும் கடைகள், அலுவலகங்களுக்கு சீல் வைக்கப்பட்டு உரிமம் ரத்து செய்யப்படும் என எச்சரித்துள்ளார்.

மேலும் கட்டுப்பாடுகளை மீறும் நபர்களுக்கு 100 ரூபாய் வீதம் அபராதம் விதித்து, 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படுவர் என்றும் பிரகாஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



## வடகொரிய தலைவரின் மரணம்– நேரில் தோன்றி முற்றுப்புள்ளி வைத்தார் கிம்!

வட கொரிய தலைவர் கிம் ஜோங் உன், இருபது நாட்களுக்கு பிறகு பொதுவெளியில் தோன்றி தன்மீதான தொடர் சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். வட கொரியாவில் நடைபெற்ற அரசு மற்றும் சில முக்கிய நிகழ்ச்சிகளில் கிம் ஜோங் உன், பங்கேற்காததைத் தொடர்ந்து, அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி பல்வேறு வதந்திகள் பரவின. கிம் ஜோங் உன், மூளைச்சாவு அடைந்து விட்டதாகவும், இருதய சிகிச்சையின் பின் சுயநினைவு அற்ற நிலையில் உயிருக்கு போராடி வருவதாகவும் பல ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வந்தன. ஆனால் இதனை தென்கொரியா மறுத்தது.

இந்தநிலையில், வட கொரிய அரசு ஊடகங்கள் அன்று (சனிக்கிழமை) அதிகாலை அவரது உடல்நிலை குறித்த வதந்திகளுக்கு மத்தியில் செய்தி வெளியிட்டு பரபரப்பை தணித்துள்ளது. கொரிய மத்திய செய்தி நிறுவனம் (கே.சி.என்.ஏ) வெளியிட்டுள்ள செய்தியில், பியோங்யாங்கின் தலைநகருக்கு அருகிலுள்ள சன்ச்சியோனில் ஒரு உரத் தொழிற்சாலை திறப்பு விழாவில் கிம் கலந்து கொண்டதாக கூறியுள்ளது. அத்துடன், பெரும் எதிர்பார்ப்புக்குரிய அவரது சகோதரி கிம் யோ ஜோங் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், அன்று (வெள்ளிக்கிழமை) இந்த நடைபெற்ற இந்த விழாவில் கிம் ஒரு நாடாவை வெட்டியதாகவும், நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் அவரை உற்சாகப்படுத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளது. நாடா வெட்டும் விழாவில் உதவியாளர்களுடன் சிரித்துக்கொண்டே பேசுவதும், ஆலை சுற்றிப்பார்க்கும் புகைப்படங்களில் கிம் காணப்பட்டார். அதிகாரப்பூர்வ ரோடாங் சின்முன் செய்தித்தாளின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட புகைப்படங்களின் நம்பகத்தன்மையை சரிபார்க்க முடியவில்லை என கூறப்படுகின்றது.



## தென்கொரியாவில் தொடர்ந்து நான்காவது நாளாகக் குறைந்துள்ள கொரோனா வைரஸ் பாதிப்பு!

கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றால், ஆரம்ப காலங்களில் மிகப்பெரிய பாதிப்பை எதிர்கொண்டிருந்த தென்கொரியா, தற்போது அப்பாதிப்பிலிருந்து மெதுவாக மீண்டு வருகின்றது.



இதனை, கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் கடந்த நான்கு நாட்கள் புள்ளிவிபரங்கள் மெய்ப்பிக்கின்றன.

கடந்த நாட்களில் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்ட தென்கொரியாவில் நான்கு நாட்களாக நோய்த்தொற்று வெகுவாகக் குறைந்துள்ள நிலையில் அன்று (சனிக்கிழமை) நிலைவரப்படி, கொரோனா வைரஸ் தொற்றால் ஆறு பேர் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளனர். இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி அங்கு பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 10,780ஆக உயர்வடைந்துள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 205ஆக உயர்ந்துள்ளது.

மேலும், 1407பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். 9123பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 55பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

# ஆளேயில்லாத மத்தள விமான நிலையமிருக்க, வடக்கில் எதற்கு இராணுவத்தின் தனிமைப்படுத்தல் மையம்? - விக்னேஸ்வரன்

கொரோனோ அபாய காலத்தில் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற செயற்பாடுகள் என்பது தமிழ் மக்கள் மத்தியில் பலத்த கேள்விகளை எழுப்பியிருப்பதுடன் சந்தேகங்களையும் உண்டுபண்ணியிருப்பதாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான சீ.வீ.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களிலேயே படையினருக்கான தனிமைப்படுத்தல் நிலையங்களை அமைப்பதானது இங்குள்ள மக்களுக்கும் கொரோனாவைப் பரப்புவதற்கான ஒரு எண்ணமா அல்லது சர்வாதிகார ஆட்சிக்கு அடித்தளமாக அமையப்போகிறதா என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.



கொரோனோ நிலைமைகளில் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனோ வைரஸின் தாக்கம் உலக ரீதியாக எம்மால் உணரப்பட்டு வருகிறது. வடக்கு கிழக்கு மாகாண தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்தக் கால கட்டத்தை வேறு காரணங்களுக்காகவும் பதவியில் உள்ளோர்கள் பாவிக்கப் பார்கின்றார்களா என்ற பயம் எம்மைப் பீடித்து இருக்கின்றது.

அதாவது கொரோனோ வைரஸின் தாக்கத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் இராணுவத்தினரை எதற்காக தமிழ் மக்கள் வாழும் பிரதேசதங்களில் தமிழ் மக்கள் மத்தியிலே அடையாளம் காட்டி அங்கு படையினர்களைக் கொண்டு வந்து வைக்கின்றார்கள் என்ற கேள்வி எழுகின்றதுடன் அது பலத்த சந்தேகங்களையும் உண்டாக்குகின்றது. குறிப்பாக இங்கிருப்பவர்களுக்கு கொரோனோ குறைந்தவாறு இருக்கும் நிலையிலே அங்கு தொற்று சந்தேகத்திலுள்ளவர்களையும் இங்கு கொண்டு வந்து வைத்து இங்குள்ளவர்களுக்கும் கொரோனாவைக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு எண்ணமா? அல்லது இதை அடிப்படையாக வைத்து வரப் போகும் ஒரு சர்வாதிகார ஆட்சிக்கு அடித்தளமாக அமையப் போகின்றதா என்று பலவிதமான கேள்விகள் எங்கள் மனதில் எழுந்து கொண்டிருக்கின்றன.எங்கள் வைத்தியர்கள் தாதியர்கள் என சுகாதார துறையினர் உன்னதமான சேவையில் ஈடுபட்டு வருகின்றார்கள். ஆனால் அதற்கு அப்பால் அரசியல் ரீதியாக பல்வேறு நடவடிக்கைகள் நடைபெற்று வருவதைப் பார்க்கும் போது இந்தக் கொரோனோவை தங்கள் தனிப்பட்ட அரசியலுக்காக பாவிக்க சிலர் முற்படுகின்றனரா என்ற சந்தேகம் எம்மை வாட்டிக் கொண்டிருக்கின்றது.

இந்த சந்தேகத்தை நீக்குவது அரசாங்கத் தரப்பின் கடமையாகும். தமிழ் மக்களிடையே அதாவது குறைந்தபட்சத்தில் கொரோனோவால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடையே அங்கிருந்து கொரோனோ சந்தேகத்தில் கொண்டு வந்து தனித்து வைக்க பார்ப்பது வருங்காலத்தில் தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது ஒருபுறமிருக்க மத்தளை விமான நிலையத்தில் போதிய இடவசதி உள்ளிட்ட பல வசதிகள் எல்லாம் இருக்கிறது. ஆகவே அங்கு கொண்டு சென்று இராணுவத்தினரை பராமரிக்காமல் இங்கு ஏன் மக்களிடையே மக்களினை மையமாக வைத்து அவர்களைச் சுற்றி படையினரை வைக்க எத்தணிக்கிறார்கள் என்று பார்க்கும் போது பல்வேறு அரசியல் காரணங்கள் இதற்கு அடிப்படைக் காரணங்களாக இருக்கக் கூடுமோ என்ற எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. ஆகவே இந்தச் சந்தேகங்களை எல்லாம் தீர்க்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. அவற்றைத் தீர்ப்பார்க்கள் என்று எதிர்பார்க்கின்றேன் என்றார்.

## உதயன் ஊடகப் பணியாளர்களின் படுகொலை நினைவு நாள் அனுஷ்டிப்பு!

உதயன் பத்திரிகை நிறுவனத்தினுள் புகுந்து ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் படுகொலையான ஊடகப் பணியாளர்களின் 14ஆம் ஆண்டு நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது.




உதயன் பத்திரிகை நிறுவனத்தில் கொல்லப்பட்ட ஊடகப் பணியாளர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் அன்று (சனிக்கிழமை) மாலை 6.10 மணிக்கு நடைபெற்றது. அதன்போது அவர்களது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த 2006ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி இரவு யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தினுள் அத்துமீறி நுழைந்த ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இரு ஊடகப் பணியாளர்கள் படு கொலை செய்யப்பட்டனர். குறித்த சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணைகளில் எவ்வித முன்னெற்றமும் இல்லாமல் இன்றுவரை அந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கிடப்பிலேயே உள்ளன.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 03.05.2020 அன்று வெளியிடப்பட்டது.